# 2022

## ප්‍රගති වාර්තාව

## முன்னேற்ற அறிக்கை

## Progress Report

# 2023

## ක්‍රියාකාරි සැලැස්ම

## செயற்பாட்டத் திட்டம்

## Action Plan

රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය

**பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**

Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government

www.mpclg.gov.lk

www.pubad.gov.lk

www.moha.gov.lk

රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
**பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**

**Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government**

| | රාජ්‍ය පරිපාලන අංශය | ස්වදේශ කටයුතු අංශය | පළාත් සභා හා පළාත් පාලන අංශය |
|---|---|---|---|
| Address | නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව<br>சுதந்திர சதுக்கம், கொழும்பு 07, இலங்கை.<br>**Independence Square, Colombo 07, Sri Lanka.** | "නිල මැදුර", ඇල්විටිගල මාවත, නාරාහේන්පිට, කොළඹ 05, ශ්‍රී ලංකාව.<br>"நில மெதுர", எல்விடிகல மாவத்தை, நாரஹன்பிட, கொழும் 05, இலங்கை<br>**"Nila Madura", Elvitigala Mawatha, Narahenpita, Colombo 05, Sri Lanka** | අංක 330, ආචාර්ය කොල්වින් ආර්. ද සිල්වා මාවත (යූනියන් පෙදෙස), කොළඹ - 02, ශ්‍රී ලංකාව.<br>இல. 330, டாக்டர். கொல்வின் ஆர்.டி. சில்வா மாவத்தை (யூனியன் பிளேஸ்), கொழும்பு - 02, இலங்கை.<br>**No. 330, Dr. Colvin R. de Silva Mawatha (Union Place), Colombo - 02, Sri Lanka.** |
| Telephone | 011- 2 696 211 /13, 011 - 2 166 000 | 011 - 2 050 450 | 011 – 2 305326 / 327, 2303280 |
| Fax | 011 – 2 695 279 | 011 - 2 551 071 | 011 - 2 699 720 |
| Email | information@pubad.gov.lk | info@moha.gov.lk | info@pclg.gov.lk |
| Web | www.pubad.gov.lk | www.moha.gov.lk | www.mpclg.gov.lk |

## பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் அமைச்சரின் ஆசிச் செய்தி



எதிர்பாராத சவால்களுக்கு மத்தியில் வழங்கல் சங்கில் செயலிழந்த 2022 ஆம் ஆண்டு, மக்களின் நாளாந்த வாழ்க்கையும் கூட குறைவடைந்து சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள் பலவற்றை எதிர்கொண்ட ஒரு வருடமாகும். ஆட்சி மாற்றம் வரை நீண்டு சென்ற இந்தப் பிரச்சினையை, மக்களின் வாழ்க்கை நிலையை நல்ல நிலைக்கு கொண்டு வரும் நோக்கில் தற்போதைய அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் ஊடாகவே தீர்க்க முடிந்தது.

அதன் போது கிராமிய எழுச்சி மற்றும் உணவுப் பாதுகாப்புக்கான ஒருங்கிணைந்த பல்துறை நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் எமது அமைச்சும் சவால்கள் நிறைந்த ஒரு பொறுப்பை நிறைவேற்றி வருகின்றது.

நாடு எந்த நிலையில் இருந்தாலும், உற்சாகமான ஆரோக்கியமான வாழ்கைக்குத் தேவையான போதுமான உணவை, நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளும் ஆற்றலை உருவாக்கும் தொலைநோக்கை முன்னிறுத்தி நடைமுறைப்படுத்தப்படும் இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கு, அரசாங்கத்தின் பேரினப் பொருளாதார மறுமலர்ச்சி இலக்குகளில் உயர் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் கிராமியப் பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் உணவுப் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கும் பணி பூர்த்தியடைந்துள்ளது. உணவு உற்பத்தியுடன் நின்றுவிடாது கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி, ஏற்றுமதி ஊக்குவிப்பு, பிள்ளைகளினதும் கர்ப்பிணித் தாய்மார்களினதும் போஷாக்கு போன்ற துறைகள் தொடர்பிலும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக ஆய்வு செய்யப்படுவதுடன் அதன் மூலம் மக்களின் போஷாக்கு தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்.

எமது அமைச்சின் உள்நாட்டலுவல்கள் பிரிவு, மாவட்ட மற்றும் பிரதேச நிர்வாகத்தையும் அதேபோன்று கிராமிய மட்டம் வரையில் நீண்டு செல்லும் அலுவலர் வலையமைப்பையும் நிர்வகிப்பதன் மூலம் ஒரு சிறப்பான பணியை நிறைவேற்றுகின்றது. 2022 ஆம் ஆண்டில் கொழும்பு மாநாகர சபை உள்ளிட்ட உள்ளூராட்சி நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்திச் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இந்த அமைச்சின் உள்ளூராட்சிப் பிரிவும் தேசிய அபிவிருத்தியின் பங்காளர்களாகச் செயற்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர்களின் சேவையின் தரத்தை மேம்படுத்துவதற்காகவும் அமைச்சின் பாராளுமன்றப் பிரிவும் பல்வேறு நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்தியது.

தாமதமடைந்த ஓய்வூதியப் பணிக்கொடைகளைச் செலுத்துவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற முடிந்தமையும், ஓய்வூதியகாரர் சமுதாயத்திற்காக எமது அமைச்சு நிறைவேற்றிய சம காலத் தேவையையும் விஞ்சிய ஒரு கடமையாகும். வாடகைக்குப் பெறப்பட்ட கட்டடமொன்றில் இயங்கி வந்த நிலமெதுர அலுவலகத்தை அரசாங்கக் கட்டமொன்றுக் கொண்டு வந்ததன் மூலம் வருடாந்தம் 15 மில்லியன் ரூபாவை சேமிக்க முடிந்தமையும் ஒரு போற்றத் பணியாகும் என்பது எனது நம்பிக்கையாகும்.

சுதந்திரத்தின் பின்னர் வந்தடைந்த மிகவும் சவால்மிக்க வருடமான 2022ஆம் ஆண்டில் அந்தப் பொருளாதாரக் கஷ்டங்களையும் அரசியல் பதற்றங்களையும் உச்ச அளவில் முகாமை செய்வதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அலுவலர்களையும் ஊழியர் குழாத்தையும் இச்சந்தர்ப்பத்தில் பாராட்டுவது பொருத்தமானதாகும். எதிர்வரும் 2023 ஆம் ஆண்டு இந்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மென்மேலும் சிறப்பாக்கி இலங்கையர்களாக பெருமிதத்துடன் எழுச்சி பெறுவதற்கு நாங்கள் அனைவரும் ஒன்றிணைவோம்.

**தினேஷ் குணவர்தன,**
**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பிரதம மந்திரி,**
**பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்**

## உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அவர்களின் செய்தி



2020.11.20 முதல் 2021.02.16 வரை பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் உள்ளகப் பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சகமாக செயல்பட்டு வந்த இந்த அமைச்சகம் 2021.02.16 ஆம் திகதியிலிருந்து உள்நாடலுவல்கள் இராஜாங்க அமைச்சகமாக பிரிக்கப்பட்டுள்ளது. மே 27, 2022 முதல், பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு என பெயர் மாறியுள்ளது. இந்த அமைச்சகத்தின் கீழ், உள்நாட்டலுவல்கள் அமைச்சகம் தற்போது இராஜாங்க அமைச்சகமாக செயல்பட்டுவருகின்றது.

புதிய அரசியலமைப்பு திருத்தங்கள், மாவட்ட மற்றும் ஆளுகை நிர்வாகத்தை செயற்றிறனாகவும் வினைத்திறனாகவும் நடைமுறைப்படுத்துவற்கான திட்டங்களை உருவாக்குவற்கான பிரதான பொறுப்பும் இந்த அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்காக, உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தலுடன், மனித வள திறனை அதிகரிப்பதுடன் தொழிநுட்ப வசதிகளையும் பெற்றுக்கொடுத்து கிராமிய மட்டம் வரையில் மிகச் சிறந்த முகாமைத்துவத்தை மேற்கொள்கிறது.

எவ்வாறாயினும், சமர்ப்பிக்கும் இந்த அறிக்கையானது இராஜாங்க உள்நாட்டலுவல்கள் அமைச்சகத்தில் 2022 தை மாதம் 1 முதல் 2022 புரட்டாதி மாதம் 30 வரை அடைந்த முன்னேற்ற அறிக்கையின் சுருக்கமாகும்.

இந்த செயல்திறன் அறிக்கையானது உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட கோவிட் தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு ஏற்றவாறு மாற்றியமைத்து அதை ஒரு நாடாக மாற்றியமைப்பதில்

அப்போதைய இராஜாங்க அமைச்சகம் மேற்கொண்ட அபிவிருத்தி முயற்சிகளை எடுத்துக்காட்டுகிறது.

எமது அரசாங்கம் அதிகாரத்திற்கு வருவதற்கு முன்னரே, வெளிப்படையான மற்றும் செயலூக்கமான பொது நிர்வாக கட்டமைப்பைக் கொண்ட அரசு வேண்டும் என்பது மக்களின் கோரிக்கைகளும் அபிலாஷைகளும் ஆகும். அதற்கு 'அரச ஊழியரின்' பொறுப்பு மிகவும் முக்கியமானது. அதற்கமைய, பொறுப்புள்ள நாட்டை உருவாக்குவதற்காக இந்த அமைச்சினால் ஒழுங்குபடுத்தப்பட்ட அரச ஊழியர்களின் பொறிமுறையில் செயலாற்றுகை ,பொறுப்பும் பொறுப்புக்கூறலும் கொண்ட செயலூக்கமான நிர்வாகத்தை கொண்ட நாட்டை உருவாக்குவதற்கு மிகவும் முக்கியமானது.

இந்த முன்னேற்ற அறிக்கையானது தேசிய மற்றும் மாவட்ட அளவிலான ஒருங்கிணைந்த ஒட்டுமொத்த முயற்சியின் விளைவாகவும்,செயற்திறனை பகுப்பாய்வு ரீதியாக நோக்கும் போது, அன்றைய அமைச்சினால் ஏற்பட்ட முன்னேற்றம் மக்களுக்கு கிடைத்த வெற்றி என்பதை மகிழ்ச்சியுடன் கூறுகின்றேன். எதிர்காலத்தில் தமது வாழ்வாதாரங்களை சரி செய்வதில் இலங்கை மக்கள் எதிர்கொள்ளும் சவால்களை நீக்கி வளமான நாட்டை கட்டியெழுப்ப உதவுவதற்கு இந்த அமைச்சு இந்த ஆண்டிலும், வரவிருக்கும் ஆண்டுகளிலும் தொடர்ந்து பெரும் முன்னேற்றங்களை மேற்கொள்ளும் என்பதை அனைவருக்கும் நினைவூட்ட விரும்புகிறோம்.

**அசோக பிரியந்த (பா.அ)**
**உள்நாட்டலுவல்கள் இராஜங்க அமைச்சு**

**மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற விவகார இராஜாங்க அமைச்சரின் செய்தி**



அனைத்து உள்ளூராட்சிமன்றங்களும் மக்களுக்கு அவர்களின் வாழ்நாளில் அத்தியாவசிய சேவைகளை வழங்குவதோடு வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் சிறப்புப் பங்கு வகிக்கின்றன என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும்.

பொதுமக்களுக்கு சேவைகளை வழங்குகின்ற அதே நேரம் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் வருமானம் மற்றும் சொத்து என்ற கருப்பொருட்களும் செயற்படுத்தப்பட வேண்டும் என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும்

பிரதேச வாரியாக உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவு செய்யப்படுகின்ற உள்ளூராட்சி மன்றங்களின் ஆண் பெண் பிரதிநிதிகளை மக்களின் பிரச்சினைகளை அடையாளம் காண்பதற்காக வழிகாட்டுவதை எமது இலங்கை உள்ளூராட்சி நிறுவகம் செய்து வருகின்றமை மகிழ்ச்சியளிக்கிறது.

அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அடுத்து வரும் வருடத்தில் குறுகிய கால மற்றும் நீண்டகால அபிவிருத்தி திட்டம் ஒன்றை தயாரிப்பதற்கும் ஏனைய அமைச்சுக்களின் மூலமாக மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளையும் உள்ளூராட்சி மன்றங்களின் ஊடாக மேற்கொள்வதற்காக உள்ளூராட்சி மன்றங்களை வலுவூட்டி பிரதேச ரீதியாக காணப்படக்கூடிய தேவையினை அதிகபட்சம் நிறைவு செய்யக்கூடிய விதமாக செயற்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

எமது அமைச்சின் கீழ் வெளிநாட்டு நிதி உதவியின் கீழ் இயங்கக் கூடிய அதிகமான கருத்திட்டங்கள் நிர்வகிக்கப்படுகின்றமையினால் அவற்றின் 100% ஆன நன்மையினை பொதுமக்களுக்கு கிடைக்கச் செய்வது எனது நோக்கமாகும்.

தற்போது தயாரிக்கப்பட்டுள்ள திட்டத்தினை பரிசீலனை செய்து விரிவான மதிப்பீடுகளின் ஊடாக பொது மக்களுக்கு தேவையான சேவைகளை வழங்குதல் மற்றும் அவர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கு தேவையான நிகழ்ச்சித் திட்டம் ஒன்றினை செயற்படுத்துவதற்கு உறுதி செய்வது எனது பொறுப்பாகும்.

உள்ளூராட்சி மன்றங்களிநால் மேற்கொள்ளப்படுகின்ற கழிவகற்றும் நடவடிக்கையினை ஒரு முறையாக அமைத்து சுற்றுச்சூழல் மற்றும் கழிவு முகாமைத்துவத்தை மென்மேலும் மேற்கொள்ளுவதற்கு அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் கடுமையாக உத்தரவிட வேண்டும் என்பது எனது அபிலாசை ஆகும்.

உள்ளூராட்சி மன்றங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து விதமான எழுத்துப் பணிகளையும் டிஜிட்டல் மயமாக்குவதன் ஊடாக வினைத்திறன் மிக்க சேவை ஒன்றினை வழங்குவதற்காக இலங்கை தகவல் மற்றும் தொலைத்தொடர்பு முகவர் நிலையத்தினைத் தொடர்புபடுத்திக்கொண்டு எமது அமைச்சின் பூரண பங்களிப்பின் கீழ் 100 உள்ளூராட்சி மன்றங்களை முதலாம் கட்டமாக டிஜிட்டல் மயப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சிமன்றங்களில் பொதுவாக காணப்படக்கூடிய குறைபாடொன்றான தீயணைக்கும் அலகினை கட்டம் கட்டமாக மேற்கொள்வதற்கும் குறித்த அலகினை ஒன்றிணைத்துக் கொண்டு தீயணைப்பு சேவைத் திணைக்களம் ஒன்றை எனது அமைச்சின் கீழ் நிறுவுவதற்கும் முன்மொழியப்பட்டுள்ளதால் அதற்காக எனது அதிகபட்ச கவனம் செலுத்தப்படுகின்றது.

உள்ளூராட்சி மன்றங்களின் சட்டங்களில் காணப்படும் ஏற்பாடுகளுக்கு ஏற்ப ஆரம்பப் பாடசாலை, குழந்தை காப்பக மத்திய நிலையங்கள் என்பவற்றினை தற்கால சூழலுக்கு ஏற்றாற்போல் அபிவிருத்தி செய்வதை உள்ளூராட்சிமன்றங்களின் மூலமாக மேற்கொள்வதற்கும் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மதஸ்தாபனங்களுக்கு இடையே நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கும் வலுவான தேவை உள்ளது.

மக்களின் வாழ்வாதாரம் போன்றே உள்ளூராட்சிமன்றங்களினதும் வருமானத்தை அதிகரிப்பதற்காக தயாரிக்கப்பட்ட கிராமிய நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தப்படுவதற்கும் தனிநபர், பொதுமக்கள் மற்றும் அரசாங்கத் தொடர்புகளை கட்டியெழுப்பி எமது அமைச்சின் அனைத்து நடவடிக்கைகளையும் மிகவும் வெற்றிகரமான முறையில் செயற்படுவதற்கு அமைச்சின் செயலாளர் உட்பட சகல ஊழியர் குழாமும் எனக்கு வழங்கக்கூடிய ஆதரவை பெரிதும் நன்றியுடன் நினைவு கூறுகின்றேன்.

**ஜானக்க வத்கும்புற**
**மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகார இராஜாங்க அமைச்**

**பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் வாழ்த்துச் செய்தி**



2021 ஆம் ஆண்டில் கோவிட் 19 நோய்த் தொற்றுக்கு மத்தியில் எதிர்கொள்ளப்பட்ட சவால்கள் மற்றும் 2022 ஆம் ஆண்டின் முதல் பாதியில் எதிர்கொள்ள வேண்டியிருந்த பொருளாதார, சமூக மற்றும் அரசியல் சவால்களுக்கு மத்தியில், பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பினை வித்தியாசமான வழியில் முன்னெடுக்க வேண்டியிருந்ததுடன், அது மிகவும் சவாலான பணியாகவும் இருந்தது

அவற்றில், எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு மத்தியில் வழமைபோல் அரச சேவையை பேணுதல், கடுமையான பணவீக்கச் சூழலிலும் அரச ஊழியர்கள் பாதிக்கப்படாத வகையில் பணிக்கு அழைத்தல், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பொருளாதார வீழ்ச்சிக்கு முகம்கொடுத்து உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல். போன்ற அண்மைக்கால வரலாற்றில் ஏற்பட்டிராத பல்வேறு பிரச்சனைகளுக்கும், சிரமங்களுக்கும் மத்தியில் அரச சேவையை தொடர்ந்து இதுவரை நாம் பேணிவந்திருப்பது ஒருவகையில் நாம் பெற்ற வெற்றியாகும்.

இதற்காக, ஐந்து நாடளாவிய சேவைகள் மற்றும் ஏழு இணைந்த சேவைகள் மூலம் அரச சேவையின் மனித வளங்களை முகாமைத்துவம் செய்தல் மற்றும் அனைத்து மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள் மற்றும் அனைத்து உள்ளூராட்சி நிறுவனங்களைக் கொண்ட இலங்கை அரச பொறிமுறையின் ஒட்டுமொத்த செயற்பாட்டு முறைமை முகாமைத்துவம், அத்துடன் அரச செலவினங்களை திறம்பட நிர்வகிப்பதற்கான முயற்சிகளின் வெற்றிக்காக அதிகபட்ச பங்களிப்பை வழங்கிய விடயத்திற்கு பொறுப்பான கௌரவ பிரதமர் அவர்கள், இராஜாங்க அமைச்சர்கள், அமைச்சின் ஊழியர்கள் மற்றும் அனைத்து அரசாங்க ஊழியர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எம்.எம்.பி.கே.மாயாதுன்னே
பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

# அறிமுகம்

வருட ஆரம்பத்தில் இராஜாங்க அமைச்சுக்கள் இரண்டினாலும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சினாலும் நிறுவப்பட்டிருந்த இவ்வமைச்சு இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 22.07.2022ஆந் திகதிய மற்றும் 43/2289 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி என மூன்று அமைச்சுக்களையும் இணைத்து பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சாக தாபிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைச்சின் விடயப் பரப்புச் செயலாளராக திரு. எம்.எம்.பி.கே. மாயாதுன்னே அவர்கள் நடவடிக்கை எடுத்து வருவதோடு, கௌரவப் பிரதமர் தினேஷ் குணவர்தன அவர்கள் அமைச்சுப் பதவியை வகிக்கின்றார்.



**கௌரவ பிரதமர் தினேஷ் குணவர்தன அவர்கள் அமைச்சுப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட போது**

அமைச்சின் கீழுள்ள மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகாரங்களின் விடயப் பரப்பினை இராஜாங்க அமைச்சர் கௌரவ ஜனக வக்குபுர அவர்களின் மேற்பார்வையின் கீழ் உள்ளதோடு, அனைத்து மாவட்டங்கள் மற்றும் பிரதேச செயலகங்களின் நிர்வாக நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தும் வகையில் உள்நாட்டலுவல்கள் விடயப் பரப்பின் மேற்பார்வை இராஜாங்க அமைச்சர் கௌரவ அஷோக பிரியந்த அவர்களினால் மேற்கொள்ளப்படுகிறது.

***வரைபடம் - அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள், நியதிச் சட்டசபை நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள்***



# රාජ්‍ය පරිපාලන අංශය
# பொது நிர்வாக பிரிவு
# Public Administration Division

## உள்ளடக்கம்


| | | பக்க எண் | | |
|---|---|---|---|---|
| *1.* | அறிமுகம் | *01* | *-* | *04* |
| *2.* | விடயப் பரப்பு - மனித வள அபிவிருத்தி | *05* | *-* | *11* |
| *3.* | விடயப் பரப்பு - கொள்கை | *11* | *-* | *12* |
| *4.* | விடயப் பரப்பு - வசதி வாய்ப்புக்களை வழங்குதல் | *12* | *-* | *14* |
| *5.* | விடயப் பரப்பு - உதவிச் சேவை | *14* | *-* | *17* |
| *6.* | விடயப் பரப்பு - ஓய்வூதியம் | *17* | *-* | *18* |
| *7.* | ஓய்வூதியத் திணைக்களம் | *19* | *-* | *23* |
| *8.* | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் | *24* | *-* | *24* |
| *9.* | தொலைக் கல்வி நிலையம் | *25* | *-* | *25* |
| *10.* | மனித வள அபிவிருத்தி இலங்கை தேசிய சபை | *26* | *-* | *26* |
| *11.* | தேசிய மொழிகள் பிரிவு | *27* | *-* | *27* |
| *12.* | அரச கரும மொழிகள் ஆணைக்குழு | *28* | *-* | *28* |
| *13.* | அரச கரும மொழிகள் திணைக்களம் | *29* | *-* | *29* |
| *14.* | தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் | *30* | *-* | *31* |
| *15.* | பாராளுமன்ற அலுவல்கள் பிரிவு | *31* | *-* | *31* |
| *16.* | *2023* ஆம் ஆண்டு செயற்படுத்த எதிர்பார்க்கும் பணிகள் | *32* | *-* | *32* |


**வரைபட பட்டியல்**


| | | | |
|---|---|---|---|
| வரைபடம் 1.1 | - | பொது நிர்வாக பிரிவின் கவனத்திற்குள்ளான முக்கிய துறைகள் | 3 |
| வரைபடம் 1.2 | - | விடயத் துறைகளின் கீழ் பல்வேறு துறைகள் அமைந்துள்ள விதம் | 4 |
| வரைபடம் 2.1 | - | நாடளாவிய சேவைகளில் ஆண் மற்றும் பெண் உத்தியோகத்தர்களின் பிரதிநித்துவம் | 7 |
| வரைபடம் 2.2 | - | அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் நாடளாவிய சேவைகளின் மொத்த ஆண் மற்றும் பெண் உத்தியோகத்தர்களின் பரவல் | 7 |
| வரைபடம் 4.1 | - | அரசாங்க மற்றும் தனியார் பங்குடைமையின் கீழ் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் | 13 |
| வரைபடம் 5.1 | - | 2022.09.30 ஆம் திகதி வரையில் அமைச்சின் நீர், மின்சாரம், தொலைபேசி மற்றும் இணைய வசதிகளுக்கான செலவுகள் | 14 |
| வரைபடம் 5.2 | - | 2022.09.30 ஆம் திகதி வரையில் வாகன பராமரிப்பு மற்றும் எரிபொருள் செலவு | 14 |
| வரைபடம் 5.3 | - | 2022.09.30 ஆம் திகதி வரையில் அமைச்சின் தபால் செலவுகள் | 15 |
| வரைபடம் 5.4 | - | மூலதன செலவுகளுக்கான ஏற்பாடுகள் ஒதுக்கீடு மற்றும் 2022.09.30 ஆம் திகதிக்கு உண்மையான செலவு | 15 |
| வரைபடம் 5.5 | - | மீண்டுவரும் செலவுகளுக்கான ஏற்பாடுகள் ஒதுக்கீடு மற்றும் 2022.09.30 ஆம் திகதிக்கு உண்மையான செலவு | 15 |
| வரைபடம் 6.1 | - | ஒழுக்காற்றுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட கோப்புகளின் | 18 |
| வரைபடம் 7.1 | - | செயற்திறமாக்கப்பட்ட புதிய ஓய்வூதியதாரர்களுக்காக செலுத்தப்பட்ட தொகை (ரூ மில்) | 21 |
| வரைபடம் 7.2 | - | 2022இல் ஓய்வுபெற்றவர்கள் எண்ணிக்கை (ஜனவரி - செப்டெம்பர்) | 21 |
| வரைபடம் 7.3 | - | அரச ஊழியர் சேமலாப நிதிய கிடைப்பனவுகள் மற்றும் செலுத்துகைகள் (ஜனவரி - செப்டம்பர்) | 22 |

**அட்டவணைப் பட்டியல்**


| | | | |
|---|---|---|---|
| *அட்டவணை 2.1* | - | *ஒருங்கிணைந்த மற்றும் நாடளாவிய சேவைகளுக்கு ஆட்சேர்ப்பு* | *5* |
| *அட்டவணை 2.2* | - | *நாடளாவிய சேவைகளில் தாபன நடவடிக்கைகள்* | *6* |
| *அட்டவணை 2.3* | - | *இணைந்த சேவையில் தாபன நடவடிக்கைகள்* | *6* |
| *அட்டவணை 2.4* | - | *அமைச்சு செயலாளர்களுக்காக வழங்கப்பட்டுள்ள பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய சுருக்கம்* | *7* |
| *அட்டவணை 2.5* | - | *சேவை அறிமுக பயிற்சி வழங்கல்* | *7* |
| *அட்டவணை 2.6* | - | *வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை நடத்துதல்* | *8-9* |
| *அட்டவணை 2.7* | - | *அமைச்சுக்கு கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகள் பற்றிய விசாரணை முன்னேற்றம்* | *11* |
| *அட்டவணை 3.1* | - | *அரச சேவையில் கொள்கைசார்ந்த தீர்மானங்களை பெற்றுக்கொள்வதற்காக அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள பங்களிப்பு பற்றிய மொத்த மீளாய்வு* | *11* |
| *அட்டவணை 4.1* | - | *நில பியஸ உத்தியோகபூர்வ இல்ல திட்டம்* | *12* |
| *அட்டவணை 5.1* | - | *உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பணிகளின் முன்னேற்றம்* | *17* |
| *அட்டவணை 5.2* | - | *உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் விசேட கணக்காய்வு பரிசீலனை அறிக்கை* | *17* |
| *அட்டவணை 6.1* | - | *ஓய்வூதியதாரர்கள் மற்றும் ஓய்வூதியதாரர் சங்கங்களினால் முன்வைக்கப்படும் பிரச்சினைகள் தொடர்பான முன்னேற்றம்* | *17* |
| *அட்டவணை 6.2* | - | *ஓய்வூதிய பிரிவினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள், அமைச்சரவை விஞ்ஞாபனம் மற்றும் வர்த்தமானி அறிவித்தல்கள்* | *18* |
| *அட்டவணை 7.1* | - | *செயற்திறமாக்கப்பட்ட புதிய ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை (ஜனவரி - செப்டெம்பர்)* | *21* |
| *அட்டவணை 7.2* | - | *பணிக்கொடை வழங்கல் (ஜனவரி - செம்டெம்பர்)* | *21* |
| *அட்டவணை 7.3* | - | *ஓய்வூதிய முறைகேடுகள் மற்றும் திருத்தங்கள் (ஜனவரி - செப்டெம்பர்)* | *21* |
| *அட்டவணை 7.4* | - | *பங்களிப்புத் தொகையை மீள செலுத்துதல் (ஜனவரி - செப்டெம்பர்)* | *22* |
| *அட்டவணை 7.5* | - | *அரசாங்க சேவை சேமலாப நிதியத்திற்கு புதிதாக இணைந்த மற்றும் நீங்கிய உறுப்பினர்கள் எண்ணிக்கை (ஜனவரி - செப்டெம்பர்)* | *22* |
| *அட்டவணை 7.6* | - | *மூலதன மற்றும் மீண்டுவரும் செலவுகள் (ரூ.மில்)* | *22* |
| *அட்டவணை 7.7* | - | *வருமான சேகரிப்பு* | *27* |
| *அட்டவணை 11.1* | - | *தேசிய மொழிகள் பிரிவில் ஏற்பாடுகள் வழங்கப்படும் பணிகளின் முன்னேற்றம்* | *27* |
| *அட்டவணை 14.1* | - | *மூலதன ஏற்பாடுகள் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்* | *30* |

# *1.*அறிமுகம்

*சிவில் நிர்வாகத்தின் கேந்திர நிலையமாக விளங்கி மக்களை மையப்படுத்திய அரச சேவைக்கான பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, அரச பொறிமுறையினுள் முதன்மையான பணிகள் இங்கு இடம்பெறுகின்றன. அங்கு அரசாங்க கொள்கைகளை திட்டமிடுதல், மனித வள முகாமைத்துவம், நிறுவன ரீதியான விருத்தி என்பனவற்றினை மனதிற்கொண்டு நடைமுறைப்படுத்தப்படும் பரந்த விடயப்பரப்புடன் கூடிய அளப்பரிய பணிகளை நிறைவேற்றும் அமைச்சாகவும் விளங்குகின்றது. தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக நாடளாவிய ரீதியான சேவைகள் மற்றும் ஒட்டுமொத்த இணைந்த சேவைகளின் நிர்வாக நடவடிக்கைகளை நிறைவேற்றி அரச சேவையினுள் மனித வளத்தினை உயர் உற்பத்தித்திறன் மிக்கதாக முகாமைத்துவம் செய்வதனை அடிப்படை நோக்கமாகக் கொண்டு அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.*

*பொதுமக்களுக்கு திருப்திகரமான அரச சேவையை வழங்குவதற்காக நியாயத் தன்மை, ஒருமைப்பாடு மற்றும் வினைத்திறனின்பால் விஷேட கவனம் செலுத்தி நிர்வாக ஏற்பாடுகள் மற்றும் சட்ட விதிகளை தயாரித்தல் இவ்வமைச்சின் மீதுள்ள அடிப்படைப் பொறுப்பாகும். அதற்கிணங்க தாபன விதிக்கோவை மற்றும் அதனுடன் தொடர்புடைய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகளை தயாரித்தல், திருத்தியமைத்தல், தேவைப்படும் சந்தர்ப்பங்களில் அதனுடைன் தொடர்புடைய அவதானங்களை பெற்றுக் கொடுக்குமெ் செயற்பாடும் இடம்பெறுகின்றன. அரசாங்க நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பில் தேசிய மட்டத்தில் கொள்கைகளை தயாரித்தல், பொருள்கோடல் மற்றும் அதனுடன் தொடர்பான வழிகாட்டல்களை வழங்குதல் என்பன இவ்வமைச்சின் மூலம் நிறைவேற்றப்படும் மற்றுமொரு தனித்துவமான பணியாகும். அதனூடாக மிகவும் உற்பத்திதிறன் வாய்ந்த சேவையொன்றினை பெற்றுக் கொடுக்க முடியுமான வகையில் ஒட்டுமொத்த அரச சேவையினதும் செயற்பாடுகளை கட்டியெழுப்புதல் மற்றும் நிர்வாகம் இதனூடாக இடம்பெறுகின்றது. அரச சேவையின் பணிக்குழாத்தின் திறமையை மேம்படுத்துவதற்காக அவசியப்படும் பயிற்சிகளை வழங்கும் செயற்பாடும் இந்த அமைச்சின் விசேட செயற்பாடுகளில் ஒன்றாகக் காணப்படுகிறது. இதற்கு மேலதிகமாக, பாராளுமன்றத்துடன் தொடர்புடைய பாராளுமன்ற அமைச்சர்களின் நடவடிக்கைகளுக்கு உரித்தாக அரசினால் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் மற்றும் அரச மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு உரித்தான நடவடிக்கைகளும் இவ்வமைச்சின் மூலம் இடம்பெறுகிறது.*

**தொலைநோக்கு**

***"தோர் அரச சேவைதேசத்திற்கான சிறந்த"***

**பணிக்கூற்று**

***"சிறந்த நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் சீர்திருத்தங்கள் என்பவற்றுக்கூடாக ஆற்றல் கொண்ட மனித வளங்களுடன் உன்னத அரச சேவையினை உறுதிப்படுத்தல்"***

**பொது நிர்வாகப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளும் செயற்பாடுகளும்**

- *வீண்விரயம் மற்றும் ஊழலை ஒழிக்கும் வகையில் அரச சேவையை சீர்திருத்தல்*
- *ஏற்கனவே உள்ள சட்ட திட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை எளிதாக்கல்*
- *அரச சேவையில் பிணக்குகளைத் தீர்ப்பதற்காக நடுவர் செயன்முறையை அறிமுகப்படுத்தல்.*
- *அரச ஊழியர் மனித வளத்தை முகாமை செய்தல்*
- *தாபன விதிக்கோவையின் கீழமைந்த செயற்பாடுகள்*
- *அரச சேவைப் பயிற்சிகளை செம்மைப்படுத்தல்.*
- *ஓய்வூதியப் பிரமாணங்களை நடைமுறைப்படுத்தல்.*
- *பாராளுமன்றம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகள் தொடர்பாக அரசங்கத்தால் செய்ய வேண்டிய பணிகள்*

## முக்கிய நிகழ்வுகள்

- **ரஷ்யக் குடியரசின் இலங்கைக்கான தூதுவர் மற்றும் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சருக்கு இடையிலான சந்திப்பு**

ரஷ்யா குடியரசின் இலங்கைக்கான தூதுவர் திரு. யூரி.பீ. மெடரி அவர்கள் மற்றும் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் தினேஷ் குணவர்தன அவர்களுக்கிடையே 29.06.2022 ஆந் திகதி பொது நிருவாக அமைச்சில் சந்திப்பொன்று இடம்பெற்றது. அத்தோடு இரு நாடுகளுக்கும் இடையிலான தற்போதைய நிலைமை மற்றும் இருதரப்பு உறவுகள் பற்றி கலந்துரையாடப்பட்டது.



ரஷ்யா குடியரசின் இலங்கைக்கான தூதுவர் திரு. யூரி.பீ. மெடரி அவர்களுக்கும் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் அமைச்சரான தினேஷ் குணவர்தன அவர்களுக்கும் இடையிலான சந்திப்ப

- **கொரியா சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனம் (KOICA) மற்றும் அமைச்சுக்கு இடையில் கொரோனா தொற்றுநோய் காலத்தில் ஆதரவற்ற குடும்பங்களை வலுவூட்டுவதற்கான திட்டத்தில் கைச்சாத்திடல்**

நுவரெலியா மற்றும் பதுள்ளை மாவட்டங்களில் கோவிட்-19 தொற்றுநோயினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமூக- பொருளாதார மீள்திறனை வலுப்படுத்தும் செயற்திட்டத்தினை கொரியா சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனம், ஐக்கிய நாடுகளின் மனித குடியேற்றத் திட்டத்துடன் (UN-Habitat) இணைந்து இவ்வமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, 28.09.2022 ஆந திகதி முத்தரப்பினரதும் கலந்துரையாடல் அறிக்கை ஒப்பந்தம் (Record of Discussion) எட்டப்பட்டது.இச்செயற்திட்டத்திற்காக கொரியா அரசினால் 6.0 அமெ. டொ. மில்லியன் தொகை வழங்கப்படவுள்ளது.




நுவரெலியா மற்றும் பதுள்ளை மாவட்டங்களில் கோவிட்-19 தொற்றுநோயினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமூக- பொருளாதார மீள்திறனை வலுப்படுத்தும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல்

- **அரசகரும மொழிகள் தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டி**

வருடாந்தம் ஜூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 05 ஆந் திகதி வரை அனுஷ்டிக்கப்படும் அரசகரும மொழிகள் வாரத்தை முன்னிட்டு அரசாங்க சேவை ஆணைக்குழு, தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டுச் செயற்திட்டத்துடன் (NLEAP) இணைந்து 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட நாடளாவிய ரீதியிலான பாடசாலை கட்டுரைப் போட்டிக்காக சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பங்கேற்று வெற்றியீட்டிய மாணவர்களுக்கு கௌரவ பிரதமர் மற்றும் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரினால் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

- **அரசகரும மொழி ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தள வெளியீடு**

அரசகரும மொழி ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளம் இந்த அமைச்சின் அமைச்சரும், செயலாளரும் மற்றும் அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் தலைவரினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

- **ஓய்வு பெற்ற அரச ஊழியர்களுக்கு மலிவு விலையில் புட் சிட்டி மூலம் பொருட்களை கொள்வனவு செய்தல்**

ஓய்வு பெற்ற அரச ஊழியர்களுக்கு மலிவு விலையில் புட் சிட்டி வர்த்தக வலையமைப்பின் ஊடாக பொருட்களை கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு இவ்வருடத்தினுள் முடிந்துள்ளது.

- **இலங்கை விஞ்ஞான சேவைக்கான புதிய உத்தியோகத்தர்களுக்கு நியமனக் கடிதங்களை வழங்குதல்**

இலங்கை கட்டிடக் கலைஞர் சேவைக்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில்

ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் பத்து பேருக்கு நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வு இந்த அமைச்சின் கௌரவ அமைச்சரினதும் செயலாளரினதும் தலைமையில் நடைபெற்றது.

***வரைபடம் 1.1 - பொது நிர்வாக பிரிவின் கவனத்திற்குள்ளான முக்கிய துறைகள்***




*அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள விடயப் பரப்பின் கீழ் நிறைவேற்றப்படும் பணிகளை கவனத்திற் கொண்டு பிரதான விடயத் துறைகள் 07 இன் கீழ் அவை கோப்பிடப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக மேற்படி முக்கிய துறைகளுக்கு உதவி புரியும் வகையில் துணைச் சேவைகளின் கீழ் மேலும் நான்கு பிரிவுகளில் சேவை வழங்கும் நடவடிக்கை இடம்பெறுகின்றன.*

*அவ்வந்த பணிகளை நிறைவேற்றும் குறித்த பிரிவுகளும் அவ்விடயத் துறைகளின் கீழ் கொண்டு வரப்பட்டு அமைச்சினால் அடையப் பெற்றுள்ள முன்னேற்றம் அதனூடாக மேற்பார்வை செய்யப்படுகின்றது.*

*அம்முக்கிய விடயப் பரப்புக்களின் கீழ் கோவைப்படுத்தப்பட்டுள்ள பிரிவுகள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.*

***வரைபடம் 1.2 - விடயத் துறைகளின் கீழ் பல்வேறு துறைகள் அமைந்துள்ள விதம்***



# 2. விடயப் பரப்பு - மனித வள அபிவிருத்தி

அரசாங்க சேவைத் துறையின் கீழ், முக்கியமாக நாடளாவிய அளவிலான சேவைகள் மற்றும் அனைத்து இணைந்த சேவைகளுக்கான புதிய உத்தியோகத்தர்களின் ஆட்சேர்ப்பு, மனித வள நிர்வாகம் மற்றும் மனிதவள முகாமை மூலம் துறை செயலாற்றுகை சுட்டிகளை அடையும் இலக்குகளுடன் செற்படும் அனைத்து துறைகளும் இந்த விடயத் துறையின் கீழ் கருதப்படுகின்றன.

**அட்டவணை *2.1* - ஒருங்கிணைந்த மற்றும் நாடளாவிய சேவைகளுக்கு ஆட்சேர்ப்பு**

| சேவைப் பிரிவு | வருடாந்தம் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அளவு | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 |
| **நாடளாவிய சேவை** | | | | | | |
| இலங்கை நிர்வாக சேவை | 132 | - | 221 | - | 253 | 01 |
| இலங்கை தொழிநுட்ப சேவை | 22 | 16 | 36 | - | 32 | - |
| இலங்கை கட்டிடக்கலைஞர் சேவை | 11 | 01 | - | 1 | - | 10 |
| இலங்கை கணக்காளர் சேவை | 13 | - | 232 | - | 133 | - |
| இலங்கை திட்டமிடல் சேவை | - | - | 106 | - | - | - |
| இலங்கை பொறியியலாளர் சேவை | - | 226 | 34 | 30 | 223 | 71 |
| **இணைந்த சேவை** | | | | | | |
| முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை | 1,050 | 5427 | 288 | - | - | - |
| மொழிபெயர்ப்பாளர் சேவை | - | - | - | - | - | - |
| நூலகர் சேவை | - | 33 | 13 | - | - | - |
| தகவல் தொழிநுட்ப சேவை | 52 | 9 | 503 | 211 | - | - |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை | - | 1,922 | - | 58,227 | 10,270 | 22,940 |
| அலுவலக உதவியாளர் சேவை | 936 | 1,111 | 986 | 1,249 | 431 | - |
| சாரதி | 379 | 811 | 209 | 175 | 86 | - |
| வருடாந்த ஆட்சேர்ப்பு எண்ணிக்கை | **2,595** | **9,556** | **2,628** | **59,893** | **11,428** | **23,012** |

மேற்குறிப்பிட்ட அனைத்து சேவைகளுக்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட மனித வளங்களை மிகவும் பயனுள்ள வகையில் நிர்வகிக்கும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படும் நிறுவன நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த சுருக்கத்தை நாடளாவிய மற்றும் ஒருங்கிணைந்த சேவை மட்டத்தில் பின்வருமாறு குறிப்பிடலாம்.

**நாடளாவிய சேவை**

அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் ஐந்து நாடளாவிய அளவிலான சேவைகளில், நிறுவன நடவடிக்கைகள் 2022.09.30 வரை பின்வருமாறு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## அட்டவணை 2.2 - நாடளாவிய சேவைகளில் தாபன நடவடிக்கைகள்

| பணிகள் | மொழிபெயர்ப்பாளர் சேவை | நூலகர் சேவை | அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை | முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை | சாரதிச் சேவை | அலுவலக உதவியாளர் சேவை | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவை ஆம் 1 வகுப்பு | ஆம் 2 வகுப்பு | ஆம் 3 வகுப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **பணியாட் தொகுதினர்** | | | | | | | | | |
| அங்கிகரிக்கப்பட்ட பதவியணியினர் | 636 | 625 | 85,585 | 29,785 | | - | 135 | 487 | 2,666 |
| உண்மையான பதவியணியினர் | 251 | 121 | 82,000 | 24,508 | 8,491 | 17,469 | 63 | 255 | 1,444 |
| புதிய ஆட்சேர்ப்புக்கள் | - | - | 20,697 | - | - | 444 | - | - | - |
| நிரந்தரப்படுத்தல் | 07 | 01 | 3,116 | 1542 | 158 | 762 | 5 | 9 | 11 |
| **தரமுயர்த்தல்** | | | | | | | | | |
| IIIஇலிருந்து IIஇற்கு | - | 09 | 433 | 1,722 | 56 | 321 | 1 | 1 | 148 |
| IIஇலிருந்து Iஇற்கு | - | 04 | 68 | 399 | 28 | 112 | | | |
| Iஇலிருந்து விசேட தரத்துக்கு /அதிஉயர் தரத்திற்கு | - | - | - | - | 28 | 172 | | | |
| ஓய்வு பெறச் செய்தல் | 02 | 03 | 15 | 337 | 43 | 112 | - | - | 9 |
| வருடாந்தமல்லாத இடமாற்றங்கள் | 10 | - | 1,743 | 1,217 | 236 | 252 | 3 | 2 | 21 |
| வருடாந்த இடமாற்றங்கள் | 06 | - | 412 | 1,286 | 176 | 633 | - | 8 | 76 |
| விடுவிப்புக்கள் | 01 | 01 | 406 | 141 | - | 77 | - | 2 | 4 |
| **ஒழுக்காற்று நடவடிக்கை** | | | | | | | | | |
| ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை | - | - | 53 | 17 | 21 | 18 | 01 | - | 02 |
| குற்றச்சாட்டுப் பத்திரங்கள் வழங்கல்கள் விளக்கம் / கோரல்கள் | - | - | 36 | 16 | 10 | 07 | - | - | - |
| ஒழுக்காற்றுக் கட்டளைகள் வழங்குதல் | - | - | 03 | 19 | 03 | 05 | - | - | - |
| சேவையை விட்டு விலகிச் செல்லும் அறிவித்தல்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மேன்முறையீடுகள் | - | - | 08 | 02 | 02 | 09 | - | - | - |

## அட்டவணை 2.3 - இணைந்த சேவையில் தாபன நடவடிக்கைகள்

| பணிகள் | நாடளாவிய சேவைகள்(2022.09.30 ஆந் திகதிக்கு) இ.க. சே | இ.தி. சே | இ.பொ.சே | இ. நி. சே | இ. வி. சே | இ. க. க. சே | இ.தொ.சே |
|---|---|---|---|---|---|---|---|
| **பணியாட் தொகுதினர்** | | | | | | | |
| அங்கிகரிக்கப்பட்ட பதவியணியினர் | 2,102 | 1,184 | 1,565 | 3,319 | 641 | 75 | 15,592 |
| உண்மையான பதவியணியினர் | 1,681 | 1,096 | 1,370 | 2,618 | 434 | 53 | இலங்கை தொழில்நுட்ப சேவைக்கான ஆட்சேர்ப்பு மற்றும் தாபன நடவடிக்கைகள் அவற்றுக்குரிய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் மேற்கொள்ளப்படும் என்பதோடு, கொள்கைத் தீர்மானங்களை எடுத்தலும் இவ்வமைச்சின் மூலம் மேற்கொள்ளப்படும். |
| புதிய ஆட்சேர்ப்புக்களின் எண்ணிக்கை | 25* | - | 71** | 01 | - | 10 | |
| நிரந்தரப்படுத்தல் | 79 | 18 | 119 | - | 25 | 10 | |
| **தரமுயர்த்தல்** | | | | | | | |
| III இலிருந்து IIஇற்கு | 88 | 58 | 62 | 85 | 35 | 10 | |
| II இலிருந்து Iஇற்கு | 80 | - | 20 | 163 | 24 | 09 | |
| அதிஉயர் / இலிருந்து விசேட I தரத்திற்கு | 84 | 10 | 19 | 07 | 15 | - | |
| ஓய்வு பெறச் செய்தல் | 01 | 02 | 11 | 37 | 05 | 01 | |
| வருடாந்தம் அல்லாத இடமாற்றங்கள் | 65 | 39 | 44 | 08 | - | 03 | |
| வருடாந்த இடமாற்றங்கள் | 07 | 17 | - | 254 | - | - | |
| விடுவிப்புக்கள் | 05 | 01 | 01 | 145 | 02 | - | |
| **ஒழுக்காற்று நடவடிக்கைகள்** | | | | | | | |
| ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை | 06 | 03 | 05 | 23 | 01 | - | |
| குற்றச்சாட்டுப் பத்திரங்கள் வழங்கல் /விளக்கம் கோரல் | 06 | 02 | 02 | 15 | 08 | - | |
| ஒழுக்காற்றுக் கட்டளைகள் வழங்குதல் | 03 | 01 | 05 | 10 | 01 | - | |
| சேவையை விட்டு விலகிச் செல்லும் அறிவித்தல்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மேன்முறையீடுகள் | - | - | - | 02 | 01 | - | |

**.நிதி அமைச்சின் அனுமதியைப் பெறுவதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது***

*****2021 ஆம் ஆண்டுக்கு உரித்தாக நடாத்தப்பட்ட திறந்த போட்டிப் பரீட்சையின் இரண்டாம் கட்டம் கட்டமாக 04.04. 2022 ஆந் திகதி முதல் அமுல்நடாத்தப்படும் வகையில் III ஆந் தரத்திற்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.***

தேசிய சேவைகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதில் ஆண், பெண் இரு பாலினருக்கும் சமமான வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன, மேலும் பாலினத்தின் படி அதிகாரிகளின் பரவல் கீழே உள்ள வரைபடங்களில் காட்டப்பட்டுள்ளது.

**வரைபடம் *2.1* - நாடளாவிய சேவைகளில் ஆண் மற்றும் பெண் உத்தியோகத்தர்களின் பிரதிநிதித்துவம்**




**வரைபடம் *2.2* - அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் நாடளாவிய சேவைகளின் மொத்த ஆண் மற்றும் பெண் உத்தியோகத்தர்களின் பரவல்**




## *2022 ஆண்டில் முக்கிய அடைவுகள்*

- **அமைச்சு உத்தியோகத்தர்களின் திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

*அமைச்சின் அதிகாரிகளுக்கான திறன் மேம்பாட்டு நிகழ்ச்சிகள் முடிந்தவரை இணையவழி ஊடாக நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.*

*அமைச்சில் பணிபுரியும் இரண்டாம் நிலை அலுவலர்களுக்கான 150 மணிநேர தமிழ் மொழிப் பயிற்சி வகுப்பு (90/2020 அரச கரும மொழிக் கொள்கைக்கு ஏற்ப) இணைய வழி ஊடாக அரச கரும மொழித் திணைக்களத்தின் வளவாளர்களின் கீழ் 03 குழுக்களுக்கு திணைக்களத்தின் பிரதான பயிற்சித் திட்டமாக செயற்படுத்தப்படுகிறது. இப்பாட நெறி முதல் குழு மற்றும் இரண்டாவது மற்றும் மூன்றாவது என இறுதி கட்டம் வரை நடைபெறும்.*

*முகாமைத்துதவம் மற்றும் முகாமைத்துவம் அல்லாத சேவை வகைகளுக்கு உள்நாட்டில், வெளிநாட்டில் மற்றும் குறுகிய கால மற்றும் நீண்ட கால அடிப்படையில் 2022.09.30 வரை வழங்கப்பட்ட பயிற்சியின் சுருக்கம் கீழே உள்ளது.*

**அட்டவணை *2.4* - அமைச்சு செயலாளர்களுக்காக வழங்கப்பட்டுள்ள பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய சுருக்கம்**

| சேவை வகுதி | உள்நாட்டு பயிற்சிப் பாடநெறி | | வெளிநாட்டு பயிற்சிப் பாடநெறி | |
|---|---|---|---|---|
| | குருங் கால | நீண்ட கால | குருங் கால | நீண்ட கால |
| **முகாமைத்துவம்** | *10* | - | *02* | *02* |
| **முகாமைத்துவம் அல்லாத** | *29* | - | - | - |
| **ஆரம்ப** | *10* | - | - | - |

- **புதிய உத்தியோகத்தர்களுக்கான சேவை அறிமுக பயிற்சி வழங்கும் நிகழ்ச்சி**

**அட்டவணை *2.5* - சேவை அறிமுக பயிற்சி வழங்கல்**

| சேவை | சேவை புகுமுக பயிற்சி வழங்கல் |
|---|---|
| **நாடளாவிய சேவை** | |
| இலங்கை கணக்காளர் சேவை | *2021 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட தரம் III உத்தியோகத்தர்களுக்கான அறிமுகப் பயிற்சித் திட்டத்தில் 6 தொகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன மற்றும் அடுத்த காலாண்டில் 3 தொகுதிகள் பூர்த்தி செய்யப்பட உள்ளன.* |
| **இணைந்த சேவை** | |
| இலங்கை தகவல் தொழிநுட்ப சேவையின் வகுப்பு *1* தரம் *III* | *14 புதிய உத்தியோகத்தர்களுக்கான பதவியேற்பு பயிற்சி செப்டம்பர் மாதம் நடத்தப்பட்டது.* |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை | *2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் புதிய அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமனம் பெற்று இந்த அமைச்சுக்கு நியமிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு 02 அறிமுக பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.* |



**புதிய அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான சேவை அறிமுக பயிற்சி வழங்கும் நிகழ்ச்சி**

- வேலையற்ற பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்பு திட்டம் - 2020 இன் கீழ், ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பட்டதாரி பயிலுனர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III இல் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர் மற்றும் 49,053 பயிற்சியாளர்கள் அரசாங்க சேவை மற்றும் மாகாண அரசாங்க சேவையில் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.
- வருடாந்த இடமாற்றங்களைப் போன்று முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான வருடாந்தமல்லாத இடமாற்றங்கள் இணையத்தள முறைமைகளின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் MSO/01 EB(GENERAL) ஆம் இலக்க மற்றும் 2021.06.28 ஆந் திகதிய கடிதத்தின்படி, முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் தரம் I ஐ சேர்ந்த 516 உத்தியோகத்தர்கள், சம்பந்தப்பட்ட பயிற்சியை முடித்த பின்னர், வினைத்திறன் தடைதாண்டலில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளனர்.
- இணைந்த சேவையின் அனைத்து உத்தியோகத்தர்களின் நிறுவன நடவடிக்கைகள் தொடர்பான குறைபாடுகளை இணையவழி ஊடாக கோருதல்.
- பொது நிர்வாக சுற்றறிக்கை 10/2012 மற்றும் தொடர்புடைய சுற்றறிக்கைகளின்படி, அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உள்வாங்கப்படுவதற்கு விருப்பம் தெரிவித்த உத்தியோகத்தர்களை உள்ளீர்ப்பு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
- இலங்கை விஞ்ஞான சேவையின் புதிய உத்தியோகத்தர்களுக்காக நடத்தப்பட்ட அறிமுகப் பயிற்சி நெறியை வெற்றிகரமாக நிறைவு செய்த உத்தியோகத்தர்களின் கலைத்திறனை மேம்படுத்தும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகளுடன் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.



**இலங்கை விஞ்ஞான சேவை புதிய உத்தியோகத்தர்களுக்காக நடத்தப்பட்ட அறிமுகப் பயிற்சி நெறிக்கான சான்றிதம் வமங்குகல்**

- இலங்கை விஞ்ஞான சேவையின் புதிய உத்தியோகத்தர்களால் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்திற்கு மூலிகைத் தோட்டத்தை வழங்குதல்



**இலங்கை விஞ்ஞான சேவை புதிய உத்தியோகத்தர்களால் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்திற்கு *SLIDA* மூலிகைத் தோட்டத்தை வழங்குதல்**

***அட்டவணை 2.6 - வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை நடத்துதல்***

| சேவை | முன்னேற்றம் |
|---|---|
| **இலங்கை நிர்வாக சேவை**<br>**இலங்கை பொறியியலாளர் சேவை**<br>**இலங்கை விஞ்ஞான மற்றும் கட்டிடக்கலைஞர் சேவை**<br>**இலங்கை கணக்காளர் சேவை**<br>**இலங்கை திட்டமிடல் சேவை** | – இந்த அனைத்து சேவைகளிலும் முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை 2019 (I)<br>– இலங்கை நிர்வாக சேவை, இலங்கை கணக்காளர் சேவை மற்றும் இலங்கை திட்டமிடல் சேவை ஆகியவற்றின் உத்தியோகத்தர்களுக்கான **"இரண்டாவது வினைத்திறன் தடைதாண்டல் 2019 (II)"** பரீட்சை தொடர்பான பரீட்சை அறிவிப்புகள் ஒக்டோபர் மாதம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுடன், பரீட்சை 05.11.2022 முதல் 26.11.2022 வரைநடைபெற திட்டமிடப்பட்டுள்ளது |
| **இலங்கை தொழிநுட்ப சேவை** | – இந்தச் சேவையின் தரம் III மற்றும் II தொடர்பான "வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை 2018 (I)"க்கான பெறுபேறுகள் 13.09.2022 அன்று வெளியிடப்பட்டன. |

| | |
|---|---|
| | – இந்தச் சேவையின் தரம் *III* மற்றும் *II* தொடர்பான "வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை *2018 (II)*"க்காக *2022.11.21*ஆந் திகதியாகம் போது விண்ணப்பங்களை ஏற்கும் பணிகள் நிறைவடையவுள்ளன.<br>– தரம் *I* உத்தியோகத்தர்களுக்கான வினைத் தாண்டல் பரீட்சைக்கு *2022.12.31* வரை விண்ணப்பங்கள் கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.<br>– தரம் *I* உத்தியோகத்தர்களை விசேட தரத்திற்கு தரம் உயர்வு தொடர்பான மட்டுப்படுடத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. |
| **நூலகர் சேவை தரம்*(III)*<br>நூலகர் சேவை தரம் *II*** | – "வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை *2018 (II) 2022*" தொடர்பான பரீட்சை அறிவிப்பு, அவதானிப்புகளை பெற்றுக்கொள்வதற்காக *09.02.2022* அன்று பரீட்சை திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| **முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை தரம் *I*** | – "வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை *2016 (I) 2022*" தொடர்பான பரீட்சை அறிவிப்பு, அவதானிப்புகளை பெற்றுக்கொள்வதற்காக *2022.06.21* அன்று பரீட்சை திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| **முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை தரம் *II*** | – "வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை *2014 (I ) 2022*" பரீட்சை தொடர்பான பரீட்சை அறிவிப்பு *2022.02.25* அன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டு ஜுன் மாதம் பரீட்சை நடத்த திட்டமிடப்பட்டிருந்தது, ஆனால் இதுவரை பரீட்சை திணைக்களத்தினால் அது நடத்தப்படவில்லை. |
| **முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைதரம் *III*** | – "வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை *2013 (I ) 2022*" பரீட்சை தொடர்பான பரீட்சை அறிவிப்பு *2022.02.25* அன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டு ஜுன் மாதம் பரீட்சை நடத்த திட்டமிடப்பட்டிருந்தது, ஆனால் இதுவரை பரீட்சை திணைக்களத்தினால் அது நடத்தப்படவில்லை. |
| **அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை** | – "முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை *2016 (I ) 2021*" பரீட்சை தொடர்பான பரீட்சை அறிவிப்பு *2021.10.29* அன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதுடன், இதுவரை பரீட்சை திணைக்களத்தினால் அது நடத்தப்படவில்லை. |
| **முகாமைத்துவ உதவியாளர் (தொழிநுட்பம் சாராத)** | – முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப பிரிவு *2* சேவை பிரிவில் ஓய்வு விடுதி நிர்வாகி பதவி மற்றும் தரவுப் பதிவாளர் பதவிக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை *2022.03.10* அன்று நடத்தப்பட்டு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.<br>– முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப பிரிவு *3* சேவை பிரிவில் ஓய்வு விடுதி நிர்வாகி பதவிக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை *2022.09.30* அன்று நடத்தப்பட்டு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. |

**நிறைவேற்றுவதற்கு எதிர்பார்த்துள்ள பணிகள்**

- இணைந்த சேவையின் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் வருடாந்தம் அல்லாத இடமாற்றங்கள் மற்றும் ஓய்வு சம்பந்தப்பட்ட விடயங்களை இணையவழி ஊடாக சமர்ப்பிப்பதற்கான வாய்ப்பை வழங்குதல்.
- இலங்கை நிர்வாக சேவை தரம் *III* இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை *2021*இற்கான பரீட்சையை இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படுவதற்கும், திறமை அடிப்படையில் *2013(2021)* போட்டிப் பரீட்சைக்கு*12* உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கும், *2014(2016)* போட்டிப் பரீட்சை தொடர்பான அறிவித்தல் வெளியிடப்படவும் உள்ளது.
- இலங்கை தகவல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு *1* தரம் *III* இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை

*2018 தொடர்பில் நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு நிதி அமைச்சின் இணக்கப்பாட்டின் பின்னர் தகைமைபெற்ற 05 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட உள்ளனர்.*

- *முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை 2019(2020) தொடர்பாக, நிதி அமைச்சின் இணக்கப்பாடு கிடைக்கப்பெற்றதன் பின்னர் நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்படும்.*
- *முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சிறப்பு சேவையின் தகுதி அடிப்படையிலான தரம் உயர்வு பரீட்சை 2019(2020) தொடர்பான சேவை மூப்புக்கான புள்ளிகளை வழங்க நேர்முகப் பரீட்சைகளை நடாத்தி பெறுபேறுகளை அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அனுப்பி அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் ஆட்சேர்ப்பை மேற்கொள்ளவும் மற்றும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையை நடத்தவும் வேண்டியுள்ளது .*
- *அரசாங்க நூலகர் சேவையின் தரம் III க்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை 2019 (2020) தொடர்பான பெறுபேறுகளுக்குப் பின்னர் நிதி அமைச்சின்ன் இணக்கப்பாட்டுடன் ஆட்சேர்ப்பு செய்யப்பட உள்ளது.*
- *அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவையின் தரம் Iக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை 2019 (2020) தொடர்பான பெறுபேறுகள் வெளியிடப்பட்டதன் பின்னர் நிதி அமைச்சின்ன் இணக்கப்பாட்டுடன் ஆட்சேர்ப்பு செய்யப்பட உள்ளது.*
- *இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்களின் சேவையை நிரந்தரமாக்குதல், தரம் உயர்வு, பதவிகளுக்கு முறையான நியமனம், பதவிகளுக்கான பதிற் கடமை/ கடமைகளை நிறைவேற்றுதல் மற்றும் வருடாந்தமல்லாத இடமாற்ற விண்ணப்பங்களை அனுப்புதல் போன்ற நிருவாகப் பணிகளை இணையவழி முறையின் ஊடாக அமுல்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட புதிய தகவல் முகாமைத்துவ முறையை மேலும் மேம்படுத்தி பேணுதல்.*
- *அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை 02/2022 இன் படி, புதிய முறையின் கீழ் இலங்கை நிர்வாக சேவையில் தரம் I இன் வெற்றிடங்களுக்கு உத்தியோகத்தர்களை இணைப்புச் செய்தல்.*
- *அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 2022.09.08 ஆந் திகதிய ஆணையின் பிரகாரம், இலங்கை பொறியியல் சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த 04 பதவிகளுக்கான உத்தியோகத்தர்களை நியமிப்பது தொடர்பில், இலங்கை பொறியியல் சேவையின் தரம் I உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தகுதி வாய்ந்த உத்தியோகத்தர்களை விசேட தரத்திற்கு தரம் உயர்வு செய்வதற்காக நடத்தப்படும் தகுதித் தேர்வு நேர்முகப் பரீட்சை 2022.11.01 அன்று நடைபெற உள்ளது.*
- *இலங்கை கட்டிடக் கலைஞர் சேவைக்காக மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 10 உத்தியோகத்தர்களுக்கு அறிமுகப் பயிற்சி வழங்கப்பட உள்ளது.*
- *இலங்கை தொழிநுட்ப சேவையின் உத்தியோகத்தர்களுக்கு 06/2006 பொது நிர்வாக சுற்றறிக்கை வெளியிடப்படுவதற்கு முன்னர் இருந்த தரம் உயர்வு முறையை மீள அறிமுகப்படுத்துவதற்கான அமைச்சரவை திருத்தத்திற்கான அவதானிப்புகள் மற்றும் ஆலோசனைகளை அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அனுப்புதல்.*
- *தகவல் அறியும் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி, 2022.06.01 முதல் 2022.09.30 வரை 39 கோரிக்கைகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், அவற்றில் 27 கோரிக்கைகளுக்கு பதிலளிக்கப்பட்டுள்ளது. 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் இருந்து முன்கொண்டுவரப்படும் கோரிக்கைகளின் எண்ணிக்கை 15 ஆகும்.*
- *அரச சேவையில் உள்ள முரண்பாடுகளை தீர்ப்பதற்கான முறைமை ஒன்றை உருவாக்குவது தொடர்பான ஊழியர் பிரமாணக் குறிப்புகளை தயாரிப்பதற்கான கலந்துரையாடல் இடம்பெற்றதுடன், மத்தியஸ்தம் தொடர்பில் அனைத்து செயலாளர்களுக்கும் அறிவிக்கும் நிகழ்ச்சியும் இந்த அமைச்சின் செயலாளர் தலைமையில் இடம்பெற்றது.*
- *புலனாய்வுப் பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் மற்றும் அதற்கான நடவடிக்கைகள் பின்வருமாறு.*

***அட்டவணை 2.7 - அமைச்சுக்கு கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகள் பற்றிய விசாரணை முன்னேற்றம்***

| ஆண்டு | முறைப்பாடுகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| | கிடைக்கப்பெற்றவை / நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றவை | நிறைவுசெய்யப்பட்டவை | இடைநிறுத்தப்பட்டவை |
| 2020 | 2 | 2 | - |
| 2021 | 2 | 1 | 1 |
| 2022 | 9 | 2 | 3 |
| மொத்தம் | 13 | 5 | 4 |

** நடவடிக்கை எடுக்கப்பட்டுவரும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை 04*

- தகவல் அறியும் சட்டம் குறித்து உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சி நடைபெற்றது, இதில் 40 உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர்.

# 3. விடயப் பரப்பு - கொள்கை

***தாபனப் பிரிவு***

அரச ஊழியர்கள் தொடர்பாகவும் அரச சேவையின் நல்இருப்பை உறுதி செய்யும் வகையில் அது தொடர்பான கொள்கைகளை வகுப்பதில் அரசுக்கு உதவுவது தாபனப் பிரிவின் முக்கியப் பணியாக இருப்பதனால், அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் அதிகாரங்களைப் பயன்படுத்துவதிலும் தாபன விதிக்கோவை, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், பொது நிர்வாக சுற்றறிக்கைகள் மற்றும் பொது நிர்வாக சுற்றறிக்கை கடிதங்கள் முக்கிய உதவியாக கொள்ளப்படுகின்றன.

***2022 முக்கிய அடைவுகள்***

- அட்டவணை 3.1 - அரச சேவையில் கொள்கைசார்ந்த தீர்மானங்களை பெற்றுக்கொள்வதற்காக அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள பங்களிப்பு பற்றிய மொத்த மீளாய்வு

| மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் எண்ணிக்கை | |
|---|---|
| வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் | 18 |
| திருத்தப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கைகள் | 03 |
| வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கை கடிதங்கள் | 04 |
| சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் | 08 |
| அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்காக தயாரிக்கப்பட்ட அவதானிப்புகள் | 136 |
| சேவைப் பிரமாண குறிப்புகளுக்காக வழங்கப்பட்ட அவதானிப்புகள் | 01 |
| ஆட்சேர்ப்பு நடைமுறைக்காக வழங்கப்பட்ட அவதானிப்புள் | 20 |

- ***தா பன விதிக் கோவையை திருத்துதல்***

2013 ஆம் ஆண்டு திருத்தி வெளியிடப்பட்ட தாபன விதிக் கோவையின் பகுதிI க்கு, 2012 ஆம் ஆண்டிற்குப் பின்னர் செய்யப்பட்டுள்ள திருத்தங்களையும் உள்ளடக்கி, 29 அத்தியாயங்களைக் கொண்டிருக்கும் வகையில் தாபன விதிக் கோவையின் பகுதிI ஐ மீளவும் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கபட்டுவருவதுடன், வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளைப் பெற்றதன் பின்னர் தாபன விதிக் கோவையை திருத்தும் நடவடிக்கைகளை முழுமைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. 2013 தாபன விதிக் கோவையின் தமிழ் மொழிபெயர்ப்பின் இறுதித் திருத்தம் மற்றும் சரவைப்பார்ப்பு தற்போது நடைபெற்று வருவதுடன், ஆங்கில மொழிபெயர்ப்பின் மறு சரிபார்ப்பு பணிகளும் நடைபெற்று வருகின்றன.

- **தகவல் அறியும் சட்டம் தொடர்பாக முன்வைக்கப்பட்ட பிரச்சினைகள்**

இந்த வருடத்தில் 49கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன் ,அவை அனைத்திற்கும் பதிலளிக்கப்பட்டுள்ளன .

- **இழப்பீட்டுக்கான அங்கீகாரம்**

இந்த ஆண்டில், 2022.09.30 வரை, இழப்பீடுக்காக அங்கீகரிக்கப்பட்ட 120 இழப்பீட்டுக் கோப்புகளுக்கு ரூ.95.8 மில்லியன் இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

- ***தாபன விதிக் கோவை ஏற்பாடுகள் பற்றி அரச உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டுதல்***

*90 அரச உத்தியோகத்தர்களுக்கு 2022.03.23 மற்றும் 2022.03.24 ஆகிய திகதிகளில் விழிப்புணர்வு பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.*

*இவ்வருடத்தில் 03 பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், வருடத்தின் நடுப்பகுதியில் பயிற்சித் திட்டங்கள் மனிதவளப் பிரிவுக்கு ஒதுக்கப்பட்டதால், இப்பிரிவின் பதவிநிலை உத்தியோகத்தர்கள் தேவையான போது அதற்கான வளப் பங்களிப்புகளை வழங்குகின்றனர்.*

- **ஆவண கோவை முகாமைத்துவ முறைமை**

ஆவணக் கோவைகளை இலகவாக அடையாளம் காணவும் கடமைகளை தாமதமின்றி மேற்கொள்ளவும் இப்பிரிவில் உள்ள கோவைகளை முறையாக களஞ்சியப்படுத்தி அதற்காக தரவுத் தளமொன்று தயாரிக்கப்பட்டுவருகிறது .

- **இழப்பீட்டு தரவுத் தளம்**

இழப்பீட்டு கோரிக்கைகள் தொடர்பான அனைத்து விபரங்கள் மற்றும் அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பொதுத் தீர்மானங்களை உள்ளடக்கி தரவுத் தளமொன்று தயாரிக்கப்பட்டுவருகிறது .

**உள்வரும் கடிதங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல்**

*பல்வேறு நிறுவனங்களில் இருந்து 4,143 கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதுடன் ,அவற்றில் 98% வீதமானவை அதாவது 4,041 கடிதங்களுக்கு பதிலளிக்கப்பட்டுள்ளன .*

## *4. விடயப் பரப்பு - வசதி வாய்ப்புக்களை வழங்குதல்*

### வீடமைப்பு மற்றும் அபிவிருத்திப் பிரிவு

*அரச உத்தியோகத்தர்களுக்குஉத்தியோகபூர்வ இல்ல வசதிகளை வழங்கும் நோக்கினை முன்னிறுத்தி, அரச உத்தியோகபூர்வ இல்லங்களை ஒதுக்குதல் மற்றும் நிர்வகித்தல், நாடு பூராகவும் புதிய உத்தியோகபூர்வ வீடமைப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல், அரச விடுமுறை பங்களாக்கள் மற்றும் விடுதிகளை ஒதுக்குதல் மற்றும் நிர்வாகம் மற்றும் வீடுகளற்ற அரச உத்தியோகத்தர்களுக்கு அடுக்கு மாடிக் குடியிருப்புக்களை வழங்குவதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் போன்ற அடிப்படை பணிகள் மற்றும் அது தொடர்பான பிற பணிகள் அனைத்தும் இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.*

***அட்டவணை 4.1 - நில பியச வீடமைப்புத் திட்டம்***

| நில பியச வீடமைப்புத் திட்டம் இணைந்த நிதியம் - | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மாவட்டம் | மொத்த செலவு (ரூபா. .மி.) | ஆலோசனைச் சேவை நிறுவனம் | கட்டிட நிர்மாண நிறுவனம் | வீட்டு அலகுகளின் எண்ணிக்கை | நிதியியல் முன்னேற்றம் (ரூபா. .மி.) | பௌதீக முன்னேற்றம் |
| **மொனராகலை கட்டம் I II மற்றும்** | *345* | ஊவா மாகாண சபை பொறியிலாளர் அலகு | சென்ட்ரல் இன்ஜினியரிங் சர்விசஸ் பிரைவட் லிமிடெட் | *32* | *295.15* | *%100* |
| **கம்பஹா கட்டம் I II மற்றும்** | *610* | மேல் மாகாண சபை பொறியிலாளர் அலகு | கட்டம் *I* இற்காக - லின்க் இன்ஜினியரின் பிரைவட் லிமிடெட்<br>கட்டம் *II* இற்காக - சென்ட்ரல் இன்ஜினியரிங் சர்விசஸ் பிரைவட் லிமிடெட் | *32* | *486.94* | *%98.2* |
| **பொலன்னறுவை** | *375* | மொரட்டுவ பல்கலைக்கழகம் | லின்க் இன்ஜினியரின் பிரைவட் லிமிடெட் | *32* | *177.52* | நிதி அமைச்சின் சுற்றறிக்கை 2022/03 இன் அறிவுறுத்தல்களின் படி திட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்தி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |







**கம்பஹ மாவட்டம்**




**பொலன்னறுவை மாவட்டம்**

- ***அரசாங்க உத்தியோகபூர்வ விடுதிகள்***

*இவ்வமைச்சினால் நிர்வாகிக்கப்பட்டு வரும் பின்வரும் உத்தியோகபூர்வ இல்லங்கள் கௌரவ அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், அரசாங்க பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் அரசாங்க பதவிநிலை அற்ற உத்தியோகத்தர்களின் வசிப்பிடத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளன.*

- *கெப்பட்டிபொல மாவத்தை மாநாட்டு விடுதிகள் – 104*
- *பங்களாக்கள் – 50*
- *ஜயவடனகம வீடுகள் – 18*
- *லோரிஸ் ஒழுங்கை வீட்டுத் தொகுதி – 20*
- *கொழும்பு 08, கோதமி பாதை வீடுகள் – 02*
- *கொழும்பு 07, " நில பியச" வீட்டுத் தொகுதி - 40அரச மற்றும் தனியார் கூட்டாண்மையின் கீழ் மேற்கொள்ளப்படும் திட்டங்கள்*

- ***அரசாங்க மற்றும் தனியார் பங்குடைமையின் கீழ் மேற்கொள்ளப்படும் திட்டங்கள்***




- ***விடுமுறை பங்களாக்கள் மற்றும் விடுதிகள்***

*அரச ஊழியர்களின் நலன்புரி நோக்கத்திற்காக இப்பிரிவின் கீழ் நாடு பூராகவும் பரந்து காணப்பட்டுள்ள அரசின் சுற்றுலா பங்களாக்கள் 08 உம், விடுமுறை விடுதிகள் 07 உம் செயற்பட்டு வருகின்றது.*

***2022 ஆம் ஆண்டில் அடையப்பெற்ற தனித்துவமான இலக்குகள் மற்றும் சாதனைகள்***

- *இந்த அமைச்சுக்குச் சொந்தமான யாழ்ப்பாண விடுமுறை விடுதி மற்றும் பண்டாரவெல சுற்றுலா பங்களா அமைந்துள்ள காணி இவ்வமைச்சுக்கு மாற்றும் நடவடிக்கைகள் தற்சமயம் நிறைவடைந்துள்ளன.*
- *அரசின் பதவிநிலை உத்தியோகத்தர்களின் வசிப்பிடத்திற்காக ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ள இவ்வமைச்சுக்குச் சொந்தமான "மாநாட்டு விடுதிகள்" 15.09.2015 ஆந் திகதிய மற்றும் 2022/20 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி புதிய வீடமைப்புக் கொள்கையை ஏற்படுத்துதல் மற்றும் அதற்கமைய 2023 ஆம் ஆண்டிற்கான வீடுகளுக்கு விண்ணப்பங்கள் கோரும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளன.*
- *இந்த அமைச்சுக்குச் சொந்தமான விடுமுறை விடுதிகள் மற்றும் சுற்றுலா பங்களாக்களை ஒதுக்கும் நடவடிக்கைக்கு இவ்வருடத்திலிருந்து இணையவழி முறை ஊடாக மேற்கொள்ளல்.*

***வருடத்தில் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள பணிகள்***

- *கொழும்பு 07, "நில பியச" வீட்டுத் தொகுதியில் நாடளாவிய சேவையில் உள்ள விசேட தரத்துடைய உத்தியோகத்தர்களுக்கு*

*03 அறைகளைக் கொண்ட விடுமுறை விடுதிகளாக மாற்றுதல்.*

- *கண்டி, அஸ்கிரிய "நில பியச" வீட்டுத் தொகுதியில் 03 அறைகள் வீதம் 02 சுற்றுலா பங்களாக்களை நிறுவுதல்.*
- *தற்சமயம் காணிகளை கையகப்படுத்தும் நடவடிக்கை இன்னும் முடிவடையாதுள்ளதனால் சுற்றுலா பங்களாக்கள் மற்றும் விடுமுறை விடுதிகளின் காணி கையப்படுத்தும் நடவடிக்கையை விரைவாக நிறைவு செய்தல்.*

## 5. விடயப் பரப்பு – உதவிச் சேவை

*அமைச்சின் விடயத்துறைக்குள் வழங்கப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்ளும் அனைத்து பிரிவுகளுக்கும் தேவையான நிதி, உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் உரிய சட்டதிட்டங்களுக்கு ஏற்ப செயற்படுகின்றனவா என கண்டறியும் பொறிமுறை போன்ற வசதிகள், தேவையான வகையிலும் போதுமான வகையிலும் தரமாகவும் வழங்கும் பணியை மேற்கொள்ளும் பின்வரும் பிரிவுகள் இதன் கீழ் கருத்திற்கொள்ளப்படும்.*

- *உள்ளக நிர்வாகப் பிரிவு*
- *நிதிப் பிரிவு*
- *தகவல் தொழிநுட்பப் பிரிவு*
- *உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு*

### உள்ளக நிர்வாகப் பிரிவு

*ஒவ்வொரு துறைக்கும் இடையே ஒரு நல்ல உறவை உருவாக்கி, அவர்களின் ஊழியர்களுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதன் மூலமும், நிறுவன வளாகத்தின் நல்இருப்பை உருவாக்குவதன் மூலமும், பொதுமக்களுக்கும் சேவைகளை நாடி அமைச்சுக்கு வரும் தரப்பினருக்கும் தகுந்த வழிகாட்டுதல் மற்றும் ஆதரவை வழங்கக்கூடிய சூழலை உருவாக்குவதற்கு இந்த பிரிவு பொறுப்பாகும்.*

### *2022 ஆண்டின் முக்கிய செயலாற்றுகை*

- *அமைச்சின் நாளாந்த நடவடிக்கைகளை பேணுவதற்காக வழங்க வேண்டிய வசதிகளான மின்சாரம், நீர், தொலைபேசி, இணைய வசதிகள், அஞ்சல், எரிபொருள் விநியோகம் மற்றும் வாகனப் பராமரிப்பு போன்றவற்றுக்காக அமைச்சினால் மேற்கொள்ளப்படும் மாதாந்த சராசரி செலவு 3.9 மில்லியன் ரூபாவாகும்.*
- *இதில், அமைச்சின் அடிப்படைக் உட்கட்டமைப்பு வசதிகளான மின்சாரம், தொலைபேசி (இணைய வசதிகளுடன்) மற்றும் நீர் வழங்கல் போன்றவற்றுக்கு மாதந்தோறும் ஏற்படும் செலவு விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.*

**வரைபடம் 5.1- *2022.09.30* ஆம் திகதி வரையில் அமைச்சின் நீர், மின்சாரம், தொலைபேசி மற்றும் இணைய வசதிகளுக்கான செலவுகள்**




- *அமைச்சுக்கு சொந்தமான வாகனங்களுக்கான பராமரிப்பு மற்றும் எரிபொருளுக்காக 20.3 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. வாகன பராமரிப்புக்கான மாதாந்த செலவுகள் மற்றும் எரிபொருள் செலவுகள் பின்வருமாறு.*

**வரைபடம் *5.2 - 2022.09.30* ஆம் திகதி வரையில் வாகன பராமரிப்பு மற்றும் எரிபொருள் செலவு**




- *அமைச்சின் "அஞ்சல்" நடவடிக்கைகளுக்காக முதல் ஒன்பது மாதங்களுக்கு ரூ. 2.6 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது, மேலும் மாதாந்த*

அஞ்சல் செலவுகள் கீழே உள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது

**வரைபடம் 5.3 - 2022.09.30 ஆம் திகதி வரையில் அமைச்சின் தபால் செலவுகள்**




- இந்த அமைச்சின் துறை மறுசீரமைப்பு இந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்டதுடன், எதிர்காலத்தில் வாடகை அடிப்படையில் உள்ள துறைகளை அமைச்சின் கீழ் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் மூலம் எதிர்காலத்தில் அரசாங்கத்திற்கு வருடமொன்றுக்கு16 மில்லியன் மீதமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் தொடர்பாடல் நடவடிக்கைகளை மேற்கொள்ள மின்னஞ்சல், வாட்ஸ்அப் மற்றும் ஜூம் செயலிகளை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

## நிதிப் பிரிவு

அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் நிதி முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு நிதிப் பிரிவு பொறுப்பாகும் மற்றும் இந்த பிரிவு கொள்முதல், நிதி அறிக்கையிடல், கொடுப்பனவுகள் மற்றும் மனித வள கொடுப்பனவுகள் ஆகிய 04 கிளைகளைக் கொண்டுள்ளது,

### 2022 ஆண்டின் முக்கிய செயலாற்றுகை

- பொதுச் சேவைத் துறையின் மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவினங்களுக்காக 2022 ஆம் ஆண்டிற்கு ரூ.29,429 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, மேலும் 2022.09.30 ஆந் திகதிக்கு மேற்கொள்ளப்பட்ட மொத்தச் செலவு ரூ. 20,865.70 மில்லியன். இது 71% சதவீதம் ஆகும்.
- ஆண்டிற்கான மொத்த மூலதன ஏற்பாட்டில் 22% மற்றும் மீண்டுவரும் ஏற்பாட்டில் 72% செலவிடப்பட்டுள்ளது.

**வரைபடம் 5.4 - மூலதன செலவுகளுக்கான ஏற்பாடுகள் ஒதுக்கீடு மற்றும் 2022.09.30 ஆம் திகதிக்கு உண்மையான செலவு**




**வரைபடம் 5.5 - மீண்டுவரும் செலவுகளுக்கான ஏற்பாடுகள் ஒதுக்கீடு மற்றும் 2022.09.30 ஆம் திகதிக்கு உண்மையான செலவு**




- அமைச்சுக்கான இயந்திரங்களை கொள்வனவு செய்தல் மற்றும் பழுதுபார்த்தல் ஆகியவற்றின் கீழ் 18% தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.
- பொருட்கள் கணக்கெடுப்பு செய்து முடிக்கப்பட்டுள்ளது.
- அரச கட்டிட வருமான சேகரிப்பு தொடர்பான கணினி மென்பொருள் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.
- அரச கட்டிட வாடகையில் அரவிடப்படவேண்டியிருந்த தொகையில் 7%க்கு மேல் சேகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- அமைச்சின் உத்தியோகபூர்வ இல்லங்களில் இருந்து வரவேண்டிய நிலுவைத் தொகையில் ரூ.6,518,988.17, அதாவது 8.5% இந்த ஆண்டில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## தகவல் தொழிநுட்பப் பிரிவு

இந்த அமைச்சின் கணினி வலையமைப்பானது, இலங்கை அரச வலையமைப்பு, பொது நிர்வாக சுற்றறிக்கை தரவு தளம், தகவல் தொழில்நுட்ப தரவு தளம், கணினி வன்பொருள் மற்றும் மென்பொருள் முகாமைத்துவம், தகவல் மற்றும் தொடர்பாடல் தகவல் தொழில்நுட்பப் பிரிவு, தொழில்நுட்பக் கொள்முதல் உள்ளிட்ட தகவல் தொடர்பாடல் செலவு உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான பொறுப்பு வகிக்கும் தகவல் தொழிநுட்பப் பிரிவு, சீர்திருத்தம் சார்ந்த தகவல் தொடர்பாடல் முகாமைத்துவத் திட்டங்களில் ஈடுபட்டுள்ளது.

- **இணையவழி முறை மூலம் பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் கூட்டங்களை நடத்துவதற்கு தேவையான வசதிகளை வழங்குதல்.**

மனிதவளத் பிரிவால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி நிகழ்ச்சிகளுக்கும் ஏனைய பிரிவுகளால் நடத்தப்படும் கூட்டங்களுக்கும் தொழில்நுட்ப உதிவி வழங்கப்பட்டது. தகவல் தொழில்நுட்ப பயிற்சிக்கான வளவாளர் உதிவியும் அளிக்கப்பட்டது.

- **அமைச்சின் உத்தியோகபூர்வ இணையதளத்தின் பாதுகாப்பு மற்றும் ஏனைய தரநிலைகளை மேம்படுத்துதல்.**

அமைச்சின் உத்தியோகபூர்வ இணையதளத்தின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், ஏனைய தரநியமங்களைப் பராமரிப்பதற்கும், *Procons PVT Ltd* உடன் ஒரு சேவை ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டுள்ளதுடன், அவர்கள் மூலம் இணையதளத்தில் உள்ள பாதுகாப்பு பிழைகளை சரிசெய்வதற்கும், பாதுகாப்பை மேலும் உறுதி செய்வதற்காக *SSL* சான்றிதழை பெற்று அதை இணையத்தளத்தில் சேர்க்க நடவடிக்கை எடுத்தல்.

- **மென்பொருள் இற்றைப்படுத்தல்.**

அமைச்சுக்குள் பயன்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட உள்ளக விழிப்புணர்வு முறைமை *Internal Awareness system* மென்பொருளும் உள்ளக அஞ்சல் விநியோகத்திற்காக உருவாக்கப்பட்ட அஞ்சல் மென்பொருளும் அமைச்சின் திணைக்களங்களுக்குப் பயன்படுத்துவதற்காக வழங்கப்பட்டன. மேலும், அமைச்சின் கட்டிட வாடகை வருவாயைக் கணக்கிடுவதற்காக உருவாக்கப்பட்ட அரசாங்க கட்டிட வருவாய் முறைமை *Government Building revenue System* மென்பொருளின் *Quarters* மொடியூல் தரவு உள்ளீட்டிற்காக வீடமைப்பு மற்றும் அபிவிருத்திப் பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் *W&OP* தொகுதியை உருவாக்கி, வருடாந்த தரவை உள்ளிட்ட பின்னர், வருடாந்த அறிக்கையைப் பெற்று கணக்குப் பிரிவுக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல்.

- **அமைச்சின் வலையமைப்பு தளத்தை இற்றைப்படுத்தல்**

புதிய வலையமைப்பு சுவிட்சுகளை நிறுவுவதன் மூலம் அமைச்சின் வலையமைப்பு முறைமையை மிகவும் வினைத்திறனாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- அமைச்சு உத்தியோகத்தர்களின் *484* கடமை அடையாள அட்டைகள் தயாரிக்கப்பட்டு, நாளாந்த அடிப்படையில் எழும் சுமார் *1500* வெவ்வேறு தகவல் தொழில்நுட்ப பிரச்சனைகளுக்கு உதவி வழங்கப்பட்டுள்ளது.

## உள்ளக கணக்காய்வுப் பிரிவு

அமைச்சின் பொது நிர்வாகப் பிரிவு மற்றும் அதன் கீழ் உள்ள ஓய்வூதியத் திணைக்களம், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம், தொலைக் கல்வி நிலையம், அரச கருமமொழிகள் திணைக்களம், அரச கரும மொழிகள் ஆணைக்குழு, மனித வள அபிவிருத்திக்கான தேசிய சபை, தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், பாராளுமன்ற அலுவல்கள் பிரிவு, அரச கரும மொழிப் பிரிவு மற்றும் அமைச்சின் கீழ் உள்ள திட்டங்கள் தொடர்பான உள்ளக கணக்காய்வுகளை மேற்கொள்ளும் பொறுப்பு மற்றும் அதற்கு மேலதிகமாக தேவைக்கேற்ப விசேட ஆய்வுகளும் உள்ளக கணக்காய்வு பிரிவின் நோக்கத்துடன் தொடர்புடையது.

### *2022* ஆண்டின் முக்கிய செயலாற்றுகை

- முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது காலாண்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டங்களை நடத்துதல்**

- அமைச்சின் கடமைகளை நிறைவேற்றும் முறைகள் பரிந்துரைக்கப்பட்ட சட்ட விதிமுறைகள் மற்றும் பணி நடைமுறைகளுக்கு இணங்க உள்ளதா என்பதைக் கண்டறிந்து பணியை நடத்தும் உள்ளக கணக்காய்வுப் பிரிவின் பங்களிப்பின் முன்னேற்றம் பின்வருமாறு.

**அட்டவணை 5.1 - உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பணிகளின் முன்னேற்றம்**

| விடயம் | முன்னேற்றம் |
|---|---|
| உள்ளக கணக்காய்வு திட்டத்தை தயாரித்தல் | 100% |
| ஆரம்ப அறிக்கை தயாரித்தல் | 100% |
| கணக்காய்வு முகாமைத்துவ குழு கூட்டங்களை நடத்துதல் | 75% |
| வவுச்சர் கொடுப்பனவு | 50% |
| சம்பளப் பட்டியல் பரிசீலனை | 100% |
| முற்பணக் கணக்கு | 75 |
| வைப்புக் கணக்கு | 100 |
| சேதம் மற்றும் பதிவழிப்பு | 100% |
| மூலதன சொத்திற்கான செலவு கண்காணிப்பு | 75% |
| செயற்திட்ட கண்காணிப்பு | 25% |
| தனிப்பட்ட கோவை கணக்காய்வு | 100% |
| வாகன பராமரிப்பு செயலாற்றுகை கணக்காய்வ | 100% |
| ஓய்வூதிய தரவுப் பகுப்பாய்வு | 25% |

- அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் மற்றும் பிரிவுகளுக்கு 2022.09.30 வரை 20 உள்ளக கணக்காய்வு வினவல்கள் வழங்கப்பட்டுள்ளன.
- இந்த வருடத்தில், உள்ளக கணக்காய்வு பிரிவு 03 விசேட கணக்காய்வு அறிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

**அட்டவணை 5.2 - உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் விசேட கணக்காய்வு பரிசீலனை அறிக்கை**

| அமைச்சு/ திணைக்களம் | விடயம் (சுருக்கம்) |
|---|---|
| **பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு** | அமைச்சின் நிதிப் பிரிவின் நடவடிக்கைகள் தொடர்பான உள்ளகக் கணக்காய்வு |
| **தேசிய மொழிப் பிரிவு** | தேசிய மொழிப் பிரிவின் முகாமைத்துவ சேவை தரம் III உத்தியோகத்தர் ஒருவர் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மனு மீதான கணக்காய்வு நடத்தப்பட்டது. |
| **தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிலையம்** | தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் தலைவர் தொடர்பாக முன்வைக்கப்பட்ட மனு மீது நடத்தப்பட்ட கணக்காய்வு |

# 6. விடயப் பரப்பு – ஓய்வூதியம்

**ஓய்வூதியப் பிரிவு**

ஓய்வூதிய பிரமாணக் குறிப்பின் கீழ் பொது நிர்வாகச் செயலாளருக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல், ஓய்வூதியம் தொடர்பான கொள்கை ரீதியான விடயங்களைத் தொகுத்தல், ஓய்வூதியம் பெறுவோர் மற்றும் ஓய்வூதியம் பெறுவோர் சங்கங்கள் சமர்ப்பித்த கோரிக்கைகள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல் மற்றும் ஓய்வூதியத் திணைக்களத்தின் தாபன விவகாரங்களை ஒருங்கிணைத்தல் ஆகியவை ஓய்வூதியப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது.

**2022 வருடத்தில் முக்கிய செயலாற்றுகை**

- ஓய்வூதியதாரர்களின் "ஓய்வூதியம் மற்றும் நலன்பேணல்" தொடர்பாக ஓய்வூதிய அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியதாரர் சங்கங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட கடிதங்கள் தொடர்பாக, பின்வருமாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 6.1 - ஓய்வூதியதாரர்கள் மற்றும் ஓய்வூதியதாரர் சங்கங்களினால் முன்வைக்கப்படும் பிரச்சினைகள் தொடர்பான முன்னேற்றம்**

| | கிடைக்கப்பெற்ற ஆவணங்களின் எண்ணிக்கை | கோவைப்படுத்தப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை | நடவடிக்கை எடுக்கப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| ஜனவரி | 351 | 80 | 271 |
| பெப்ரவரி | 305 | 70 | 235 |
| மார்ச் | 324 | 65 | 259 |
| ஏப்ரல் | 178 | 38 | 140 |
| மே | 160 | 30 | 130 |
| ஜூன் | 168 | 33 | 135 |
| ஜூலை | 89 | 25 | 64 |
| ஆகஸ்ட் | 270 | 49 | 221 |
| செப்டெம்பர் | 455 | 57 | 398 |

- ஓய்வூதிய பிரமாணக் குறிப்பின் பிரிவுகள் *12* மற்றும் *15*ன் கீழ் ஓய்வுபெற்ற அதிகாரிகளின் ஒழுக்காற்று உத்தரவுகளின்படி ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை வழங்குவது தொடர்பான பரிந்துரைகளை வழங்குவதற்காகச் செயற்படும் ஒழுக்காற்றுக் குழுவிற்கு பரிந்துரைகளுக்காக சமர்ப்பிக்கப்பட்ட கோப்புகளின் எண்ணிக்கை பின்வருமாறு. உரிய பரிந்துரைகளை அளித்த பின்னர், கோப்புகள் செயலாளரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்படுகின்றன.

**வரைபடம் *6.1* - ஒழுக்காற்றுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட கோப்புக்களின்**




- இந்தப் பிரிவினால் *2022* ஆம் ஆண்டில் *02* சுற்றறிக்கைகள், *03* அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் மற்றும் ஒரு வர்த்தமானி அறிவித்தல் ஆகியவை வெளியிட்டுள்ளன.

**அட்டவணை *6.2* - ஓய்வூதியதாரர்கள் மற்றும் ஓய்வூதியதாரர் சங்கங்களினால் முன்வைக்கப்படும் பிரச்சினைகள் தொடர்பான முன்னேற்றம்**

| சுற்றறிக்கைகள் / விஞ்ஞாபன இல. | விடயங்கள் |
|---|---|
| **பொது நிர்வாக சுற்றறிக்கைகள்** | |
| *02/2022* | *அரச ஊழியர்களின் கட்டாய ஓய்வு வயதை 65 வரை நீடித்தல்* |
| **பொது நிர்வாக சுற்றறிக்கை *19/2022*** | *அரச ஊழியர்களின் கட்டாய ஓய்வு வயதை 60 ஆகக் குறைத்தல்* |
| **அமைச்சரனை விஞ்ஞாபனங்கள்** | |
| ***PA/Pns-01/02/2022*** | *ஓய்வு பெறும் அரச ஊழியர்களுக்கு பணிக்கொடை வழங்குதல்.* |
| ***PA/Pns-03/35/2022*** | *ஓய்வு பெறும் அரச ஊழியர்களுக்கு பணிக்கொடை வழங்குதல்.* |
| ***PA/Pns-04/47/2022*** | *அரச ஊழியர்களின் கட்டாய ஓய்வு வயதை 60 ஆகக் குறைத்தல்* |
| **வர்த்தமானி அறிவித்தல்** | |
| - | *ஓய்வூதிய பிரமாண குறிப்பின் 02 மற்றும் 17 வது பிரிவுகளை திருத்துதல்.*<br>*அனைத்து அரச ஊழியர்களின் கட்டாய ஓய்வு வயதை 65 ஆக நீட்டித்தல்.* |

# *7. ஓய்வூதியத் திணைக்களம்*

***2022 ஆம் ஆண்டின் முக்கிய செயற்திறன்கள்***

- ***அரச உத்தியோகத்தர்களின் கட்டாய ஓய்வு பெறச் செய்யும் வயதை திருத்தியமைத்தல்.***

*அரசியலமைப்புச் சட்டத்தால் அல்லது வேறு சட்டத்தால் அல்லது குறிப்பிடப்படாத உத்தியோகத்தர்களின் கட்டாய ஓய்வு பெறச் செய்யும் வயது தவிர்ந்த, ஏனைய சகல உத்தியோகத்தர்களினதும் கட்டாய ஓய்வு பெறச் செய்யும் வயதினை 01.01.2022 ஆந் திகதி முதல் வலுவிலிருக்கும் வகையில் 65 வயதாக நீடிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், மீண்டும் இலக்கம் 22/1403/605/014 மற்றும் 12.09.2022 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் படி கட்டாய ஓய்வு பெறச் செய்யும் வயதினை 60 வரை குறைக்கப்பட்டு அது 01.01.2023 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.*

- ***"டு" அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிக்கான ஓய்வூதிய உரித்துடமை பெறுவதற்கான குறைந்த பட்ச சேவைக் காலத்தை நீடித்தல்.***

*"டு" அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிக்கான ஓய்வூதிய உரித்துடமை பெறுவதற்கான குறைந்த பட்ச சேவைக் காலத்தை 10 வருடங்களாக திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

- ***ஓய்வூதியர்களுக்காக ரூபா. 5,000 இனை மாதாந்த கொடுப்பனவாக செலுத்தல்.***

*03.01.2022 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை 03/2022 மற்றும் 20.01.2022 ஆந் திகதிய ஓய்வூதிய சுற்றறிக்கை 01/2022 இன் பிரகாரம் 01.01.2022 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் ஓய்வூதியம் கணிப்புக்கு ஏற்புடையதாக்கிக் கொள்ளப்படாத ரூபா. 5,000இனை மாதாந்த கொடுப்பனவாக ஓய்வூதியர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 574,686 ஓய்வூதியர்களுக்கு ஜனவரி முதல் செப்டம்பர் மாதம் வரை இதற்காக ரூபா 25,959 மில்லியன் தொகை செலவிடப்பட்டுள்ளது.*

- ***கைவிரல் ரேகை மூலம் வருடாந்த உயிர் வாழ்வதற்கான சான்றிதழைப் பெறும் வசதி விரிவுபடுத்தப்பட்டுள்ளது.***

*01.02.2022 ஆந் திகதிய ஓய்வூதியச் சுற்றறிக்கை 02/2020(திருத்தம் VII) இன் பிரகாரம் கைவிரல் ரேகைகள் மூலம் வருடாந்த உயிர் வாழ்வதற்கான சான்றிதழை வழங்கும் வசதிகள் 75 செலான் வங்கிக் கிளைகளின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, தற்போது பிரதேச செயலகங்கள், பான் ஏஷியா வங்கிக் கிளைகள், மக்கள் வங்கிக் கிளைகள், தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகள், பிதேச வங்கிக் கிளைகள் மற்றும் செலான வங்கிக் கிளைகள் ஊடாக நாடு பூராகவும் 415 இடங்களில் ஓய்வூதியதாரர்களுக்கு இந்த வசதிகளைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளது.*



கௌரவ அமைச்சர் ஓய்வூதியத் திணைக்களத்தில் மேற்பார்வைக்கான விஜயத்தின் போது

- ***முப்படையினரின் ஓய்வூதிய உரிமை முறையை எளிதாக்குதல்.***

*27.06.2022 ஆந் திகதிய ஓய்வூதியம் சுற்றறிக்கை 04/2022 இன் பிரகாரம் முப்படைகளின் சேவைப் பணிக்கொடை மற்றும் விசேட இழப்பீட்டு தொகையை செலுத்துவதற்கான விண்ணப்பங்களின் முகாமைத்துவத்திற்காக இணையவழி அமைப்பை அறிமுகப்படுத்தல்.*

*08.03.2022 ஆந் திகதிய ஓய்வூதியச் சுற்றறிக்கை 02/2022 இன் மூலம் 1981 ஆம் ஆண்டு இராணுவ, கடற் மற்றும் வான் படையினருக்கான ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடைப் பிரமாணக் குறிப்பின் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு வாழ்வாதாரக் கொடுப்பனவுகளுக்கான உரிமைக்கான விண்ணப்பங்களைக் குறிப்பிடுகையில் பதிய படிவங்களின் படி விண்ணப்பங்களைப் பெறுவதற்கான வழிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது.*

*22.07.2021 ஆந் திகதிய ஓய்வூதியச் சுற்றறிக்கை 03/2021 இன் படி போரின் போது இறந்த இலங்கை பொலிஸ் உத்தியோகத்தர்களின் கீழ் தங்கியிருப்போருக்கு வழங்கப்பட்ட நிலையான உதவித்தொகையை திருத்துவதற்காக தகவல் தொழில்நுட்ப அமைப்பை மேம்படுத்தல்.*

முப்படையினரின் இறப்புப் பணிக்கொடை செலுத்துகைக்கான விண்ணப்பங்கள் இணையவழி முறை ஊடாக அனுப்புவதற்கு அவசியப்படும் நடவடிக்கையை ஏற்படுத்தல்.

- **விதவைகள், தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய முறையின் கீழ் பதிவு செய்தல்.**

06.10.2022 ஆந் திகதிய ஓய்வூதியம் சுற்றறிக்கை 02/2016 (திருத்தம் I) இன் மூலம் விதவைகள், தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய முறையின் கீழ் பதிவு செய்வதற்காக இதற்கு முன்னர் காணப்பட்ட அச்சிடப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் இணைப்புக்களை தபாலில் பெற்றுக்கொள்வதற்கான முறையை மாற்றி குறித்த ஆவணங்களை ஸ்கேன் செய்து இணையவழி முறை ஊடாக அனுப்புவதற்கு அவசியப்படும் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

- **ஓய்வூதியத்தை திருத்தியமைத்தல்.**

14.09.2022 ஆந் திகதிய ஓய்வூதியச் சுற்றறிக்கை 05/2022 இன் படி ஓய்வு பெற்றுச்சென்றதன் பின்னர் பல்வேறு காரணங்களினால் ஓய்வூதியங்கள் திருத்தப்பட வேண்டிய ஓய்வூதியர்களின் ஓய்வூதிய விண்ணப்பங்களை இணையவழி ஊடாக சமர்ப்பிப்பதற்கு அவசியப்படும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

- **ஓய்வூதியத்தை அதிகமாகச் செலுத்தும் முகாமைத்துவம்.**

ஆந் திகதிய ஓய்வூதியச் 10.06.2022சுற்றறிக்கை 03/2020 இன் படி ஓய்வூதியத்தை செலுத்தும் முகாமைத்துவத்தின் போது கண்டறியப்பட்டுள்ள ஓய்வூதியம் அதிகமாகச் செலுத்தப்பட்டவற்றினை அறவிட்டுக் கொள்வதற்கான முகாமைத்துவத்தை புதிய தகவல் தொழில்நுட்ப அமைப்பொன்றின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- **வெளிநாடு சென்றுள்ள உத்தியோகத்தர்களின் தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் பங்களிப்புத் தொகையை சேகரித்தல்.**

அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 14/2022, 14/2022(I), 14/2022(II) மற்றும் 19.09.2022 ஆந் திகதிய ஓய்வூதியம் சுற்றறிக்கை 06/2022 பிரகாரம் வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் உள்நாட்டு வேலைக்காக விசேட லீவினைப் பெற்றுள்ள உத்தியோகத்தர்கள் அவர்களின் லீவு காலத்தினுள் விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் பங்களிப்புத் தொகையை திரட்டுதல் மற்றும் கணக்கிடலுக்குரிய புதிய இணையவழி அமைப்பை அறிமுகப்படுத்தல்.

- **ஓய்வூதியத் திட்டத்தை முனைப்புடன் பன்முகப்படுத்தல்.**

நிலவிய கொவிட் 19 தொற்று நோய் நிலைமை மற்றும் நாட்டில் காணப்பட்ட எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக ஏற்பட்ட போக்குவரத்து பிரச்சினைகளினால் ஓய்வூதியத்தை முனைப்பாக்குவதற்காக நேர்முகப் பரீட்சைகளை நடாத்துவதற்கு முடியால் போன ஓய்வூதியதாரர்களுக்கான ஏப்ரல் மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரை காலி, மாத்தறை மற்றும் கண்டி மாவட்டங்களில் ஓய்வூதியத்தை முனைப்பாக்குவதற்கான நேர்முகப் பரீட்சைக்கான நடமாடும் சேவைகள் மூன்றினை நடாத்திச் செல்லல்.

ஒக்டோபர் மாதம் 08 ஆந் திகதிக்கு அமைந்துள்ள தேசிய ஓய்வூதியர்கள் தினத்திற்கு இணையாக ஓய்வூதியத்தை முனைப்புடனாக்குவதற்கான நேர்முகப் பரீட்சை நடவடிக்கைகளை மாவட்ட மட்டத்தில் பன்முகப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய மாத்தறை, அநுராதபுரம், கண்டி, குருணாகல் மற்றும் பதுள்ளை ஆகிய மாவட்டங்களில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.



**மாத்தறை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற ஓய்வூதிய முனைப்பாக்கத்தை பன்முகப்படுத்தும் திட்டம்**

- **தேசிய ஓய்வூதியர் தினத்தை கொண்டாடுதல்.**

நாட்டில் நிலவுகின்ற கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக தேசிய வரவு செலவுத் திட்டச் சுற்றறிக்கை 03/2022 என் அறிவுறைகளின் படி அரச செலவுகளை குறைப்பதற்காக ஓய்வூதியத் திணைக்களத்தினால் இந்த முறை தேசிய ஓய்வூதியர் தினக் கொண்டாட்டம் சிரேஷ்ட மட்டம் ஓய்வூதியர் சமூகத்திற்கு வழங்கப்படும் சேவைகளை பன்முகப்படுத்தும் வேலைத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- **பயிற்சித் திட்டங்களை நடாத்துதல்**

ஓய்வூதிய முகாமைத்துவ தரவுத் தளம் மற்றும் அதனுடன் தொடர்பான நடவடிக்கைகளை பல்வேறு அரச உத்தியோகத்தர்களுக்கு

இணையவழி முறை ஊடாக பயிற்சி திட்டங்களை நடாத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது .

*2022/14* ஆம் சுற்றறிக்கையின் கீழ் வெளிநாடு செல்லும் உத்தியோகத்தர்களுக்கான விதவைகள் மற்றும் அநாதைகளுக்கான பங்களிப்புத் தொகையை அனுப்புவதற்கான முறையொன்றினை அறிமுகம் செய்தல் மற்றும் இணையவழிப் பயிற்சிகளை *5000* உத்தியோகத்தர்களுக்கு *19* நிகழ்ச்சித்திட்டங்கள் முலம் நடாத்தப்படவுள்ளது.

திணைக்கள இணையத்தளம் மற்றும் உத்தியோகபூர்வ *youtube* அலைவரிசை ஊடாக இந்திட்டத்தை பார்ப்பதற்கு வாய்ப்பளிக்கப்படவுள்ளது.

## ஓய்வூதியம் செலுத்துதல்

**அட்டவணை *7.1* - செயற்திறமாக்கப்பட்ட புதிய ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை (ஜனவரி - செப்டெம்பர்)**

| மாதம் | ஓய்வூதியர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| | சிவில் | வி.த.அ.ஓ.தி. | இராணுவத்தினர் |
| ஜனவரி | 1047 | 709 | 426 |
| பெப்ரவரி | 1562 | 1248 | 898 |
| மார்ச் | 1194 | 756 | 619 |
| ஏப்ரல் | 1658 | 1291 | 690 |
| மே | 738 | 509 | 290 |
| ஜூன் | 531 | 983 | 248 |
| ஜூலை | 1260 | 757 | 759 |
| ஆகஸ்ட் | 520 | 583 | 833 |
| செப்டம்பர் | 1347 | 1027 | 921 |

**வரைபடம் *7.1* - செயற்திறமாக்கப்பட்ட புதிய ஓய்வூதியதாரர்களுக்காக செலுத்தப்பட்ட தொகை (ரூ மில்)**




**அட்டவணை *7.2* - பணிக்கொடை செலுத்துகை (ஜனவரி- செப்டம்பர்)**

| மாதம் | ஓய்வூதியர்களின் எண்ணிக்கை | தொகை ரூபா. மில்லியன் |
|---|---|---|
| ஜனவரி | *1,143* | *1,200.79* |
| பெப்ரவரி | *423* | *383.03* |
| மார்ச் | *1,679* | *1,674.23* |
| ஏப்ரல் | *1,353* | *1,090.41* |
| மே | *1,395* | *1,405.95* |
| ஜூன் | *1,456* | *1,524.49* |
| ஜூலை | *1,165* | *1,105.41* |
| ஆகஸ்ட் | *2,958* | *2,950.35* |
| செப்டம்பர் | *3,038* | *2,625.81* |
| மொத்தம் | ***14,610*** | ***13,960.48*** |

**வரைபடம் *7.2* - *2022*இல் ஓய்வுபெற்றவர்கள் எண்ணிக்கை (ஜனவரி - செப்டெம்பர்)**




**அட்டவணை *7.3* - ஓய்வூதிய மோசடிகள் மற்றும் திருத்தம் (ஜனவரி- செப்டம்பர்)**

| மாதம் | எண்ணிக்கை | தொகை ரூபா. மில்லியன் |
|---|---|---|
| ஜனவரி | *814* | *73.00* |
| பெப்ரவரி | *980* | *69.43* |
| மார்ச் | *1,092* | *29.71* |
| ஏப்ரல் | *1525* | *44.47* |
| மே | *1274* | *66.91* |
| ஜூன் | *1318* | *85.48* |
| ஜூலை | *1238* | *73.34* |
| ஆகஸ்ட் | *819* | *95.24* |
| செப்டம்பர் | *861* | *77.80* |
| மொத்தம் | ***9,921*** | ***615.37*** |

**அட்டவணை 7.4 - பங்களிப்புத் தொகை மீள செலுத்துதல் ( ஜனவரி - செப்டம்பர்)**

| மாதம் | செலுத்தியவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| ஜனவரி | 82 |
| பெப்ரவரி | 184 |
| மார்ச் | 453 |
| ஏப்ரல் | 113 |
| மே | 40 |
| ஜூன் | 214 |
| ஜூலை | 252 |
| ஆகஸ்ட் | 263 |
| செப்டம்பர் | 233 |
| மொத்தம் | **1,834** |

**வரைபடம் 7.3 - அரச ஊழியர் சேமலாப நிதிய கிடைப்பனவுகள் மற்றும் செலுத்துகைகள் (ஜனவரி - செப்டம்பர்)**




**அட்டவணை 7.5 - அரச ஊழியர் சேமலாப நிதியத்தில் புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட மற்றும் நீக்கப்பட்ட அங்கத்தவர்களின் எண்ணிக்கை (ஜனவரி - செப்டம்பர்)**

| மாதம் | புதிதாக இணைந்து கொண்ட அங்கத்தவர்களின் எண்ணிக்கை | நீக்கப்பட்ட அங்கத்தவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| ஜனவரி | 4,151 | 447 |
| பெப்ரவரி | 4,260 | 431 |
| மார்ச் | 3,749 | 505 |
| ஏப்ரல் | 1,689 | 432 |
| மே | 1,691 | 294 |
| ஜூன் | 853 | 287 |
| ஜூலை | 88 | 287 |
| ஆகஸ்ட் | 4,090 | 329 |
| செப்டம்பர் | 2,925 | 527 |
| மொத்தம் | **23,496** | **3,539** |

**அட்டவணை 7.6 - மூலதன மற்றும் மீண்டுவரும் செலவுகள் (ரூபா. மில்)**

| மாதம் | மீண்டுவரும் செலவினங்கள் (ரூபா.மி.) | மூலதனச் செலவுகள் (ரூபா. மில்.) |
|---|---|---|
| ஜனவரி | 24,882.67 | 0.19 |
| பெப்ரவரி | 30,580.46 | 1.05 |
| மார்ச் | 28,978.18 | 4.39 |
| ஏப்ரல் | 28,945.32 | - |
| மே | 28,434.62 | 0.08 |
| ஜூன் | 28,767.00 | 0.82 |
| ஜூலை | 28,598.95 | 0.37 |
| ஆகஸ்ட் | 30,098.65 | 0.56 |
| செப்டம்பர் | 30,249.08 | 2.86 |
| மொத்தம் | **259,534.93** | **10.33** |

**அட்டவணை 7.7 - வருமான சேகரிப்பு (ஜனவரி - செப்டம்பர்)**

| விபரம் | சேகரிக்கப்பட்ட வருமானம் ( ரூபா. மில். ) |
|---|---|
| மத்திய அரசு | 18,002.52 |
| மாகாண சபை | 9,856.85 |
| ஆசிரிய விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியம் | 337.32 |
| மொத்தம் | **28,196.68** |

- திணைக்களத்திற்குச் சொந்தமான கட்டிடங்களின் வாடகையின் படி செலுத்தியதால் ஜனவரி மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை ரூபா. 10.6 மில்லியன் தொகை மற்றும் விடுமுறை விடுதிகளின் மூலம் ரூபா. 1.25 மில்லியன் தொகை அரச வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது.

### 2022 ஆம் ஆண்டினுள் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் செற்பாடுகள்

- 2022 ஒக்டோபர் மாதம் 01 ஆந் திகதி வரை காத்திருப்புப் பட்டியலில் உள்ள ஓய்வூதியர்கள் 14,83 பேருக்கான பணிக்கொடை செலுத்தப்பட வேண்டியுள்ளதோடு அதற்காக ரூபா. 15,414மில்லியனை கட்டு நிதியாக திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெறவுள்ளது. அதற்படி, பணிக்கொடை செலுத்துவது தாமதமடைந்துள்ள காரணத்தினால் ஓய்வூதியர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை குறைப்பதற்காக புதிய ஏற்பாடுகளை உள்ளடக்கி ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பினை திருத்தியமைக்க முன்மொழிதல்.

- *அரச சேவையில் ஈடுபட்டு மரணித்த உத்தியோகத்தர்களுக்காக மரண பணிக்கொடை நலன்களை உரித்தாக்கும் தரவு தளத்தின் ஊடாக மாத்திரம் மேற்கொள்வதற்கு அவசியப்படும் வசதிகளை ஏற்படுத்தல்.*
- *01.01.2016 ஆந் திகதிக்கு முன்னர் ஓய்வு பெற்ற சிவில் ஓய்வூதியர்களுக்கான அக்ரஹார சுகாதார காப்புறுதித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்.*
- *2015 இன் பின்னர் நியமனங்களைப் பெற்ற அரச உத்தியோகத்தர்களுக்கு உரித்தாகும் ஓய்வூதிய முறையை குறிப்பாக அறிமுகப்படுத்தல்.*
- *பொது நிர்வாக சுற்றறிக்கை 23/94 க்கு புறம்பாக அரச சேவைக்கு இணைத்துக் கொள்வதற்கான அதிகபட்ச வயதெல்லையான 45 இற்கு மேற்பட்ட மத்திய அரசு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு இணைத்துக் கொள்ளப்படுவதனை உறுதியாக நிறுத்துதல் மற்றும் தற்போது இணைத்துக் கொள்ளப்பட்டு ஓய்வூதிய நலன்களைக் கோரும் ஊழியர்கள் தொடர்பாக பொதுவானதொரு முடிவுக்கு வருதல்.*
- *நிலவுகின்ற நிதி நெருக்கடியின் மத்தில் மற்றும் எதிர்வரும் காலங்களில் நிலைபேறான ஓய்வூதியத்தை செலுத்துவதற்காக அரச மற்றும் மாகாண அரச சேவைக்கான பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் மற்றும் நிதியத்தை அறிமுகப்படுத்தல்.*
- *மத்திய அரசு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பல்வேறு சமூகப் பாதுகாப்பு நலன் திட்டத்தை ஒருங்கிணைத்து ஒரு நிறுவனமாக செயற்படுத்தல்.*
- *ஏற்கனவே சமூக பாதுகாப்பு நலன்களைப் பெறாத தனியார் மற்றும் சுய தொழில மற்றும் பிற துறைகளுக்காக அனைவருக்கும் ஓய்வூதிய தேசிய கொள்கையின் கீழ் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகப்படுத்தல்.*

# 8. இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம், பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அறிவு விருத்தி மற்றும் திறன்களை மேம்படுத்துவதற்கான இலங்கையின் முதன்மையான அரச துறை பயிற்சி நிறுவனமாக விளங்குகின்றது. முகாமைத்துவ பயிற்சி நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக, முகாமைத்துவத்தின் அடையாளங் காணப்பட்ட செயற்பாட்டுப் பிரிவுகளை அபிவிருத்தி செய்வதற்கும் நிறுவன அமைப்புகளை மீளாய்வு செய்வதற்கும் மேம்படுத்துவதற்கும் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் முகாமைத்துவ ஆலோசனை சேவைகள் மற்றும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## *2022 ஆம் ஆண்டு இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் விசேட நிகழ்வுகள்*

- ***அரச முகாமைத்துவ முதுமானிப் பட்டம் பாடநெறிக்காக(MPM) 2023/2021ஆம் வருடத்திற்கு புதிய ஆட்களை இணைத்துக் கொள்ளல்***

*2021/2023 ஆம் ஆண்டிற்கான அரச முகாமைத்துவ முதுமானிப் பட்டப் பாடநெறியின் துவக்க விழா சிலீடா சங்கதனீ மண்டபத்தில் 16.09.2022 ஆந் திகதி நடைபெற்றது.*

- ***விஞ்ஞான சேவைக்கு இலங்கை 2021 இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள புதிய உத்தியோகத்தர்களின் சேவைத் துவக்கப் பயிற்சி முடிவில் சான்றிதழ்களை வழங்குதல்***

*2021ஆம் ஆண்டு இலங்கை விஞ்ஞான சேவைக்கு இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் சேவைத் துவக்கப் பயிற்சியின் முடிவில் சான்றிதழ்களை வழங்கும் நிகழ்வு 30.09.2022ஆந் திகதி சிலிடா பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.*



**இலங்கை விஞ்ஞான சேவைக்கு இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள புதிய உத்தியோகத்தர்களின் சேவைத் துவக்கப் பயிற்சி**

- ***ஆங்கிலம் பாடநெறிக்காக 2021 ஆம் ஆண்டிற்கு புதிய குழுவினரை இணைத்துக் கொள்ளல்***

*சிலிடாவின் ஆங்கில டிப்ளோமா பாடநெறிக்காக 38 உத்தியோகத்தர்களும், வேலைவாய்ப்பு நோக்கங்களுக்காக ஆங்கில மொழி சிலிடா சான்றிதழ் பத்திர பாடநெறிக்காக 14 உத்தியோகத்தர்களும் இணைத்துக் கொள்ளப்பட்டார்கள்.*

- ***2022 ஆம் ஆண்டில் நடைபெற்ற பரீட்சைகள்***

*2022 ஆம் ஆண்டிற்கான அரச சேவையில் உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்காக நடாத்தப்பட்ட 02 திறந்த போட்டிப் பரீட்சைகள் மற்றும் 23 வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைகளுக்குமாக மொத்தம் 1135 விண்ணப்பதாரிகள் தோற்றினார்கள். இதற்கு மேலதிகமாக சிலிடா நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட பாடநெறிக்குரிய பரீட்சைகள் 16 உம் உள்ளகப் பரீட்சைகள் 3 இடம்பெற்றதோடு அதற்காக 532 விண்ணப்பதாரிகள் கலந்து கொண்டார்கள்.*

- **தகவல் தொழில்நுட்ப மற்றும் தொடர்பாடல் ஊக்குவிப்புப் பிரிவு**
    - *இலங்கை நிர்வாக சேவையின் 2021 )திறந்த) குழுவிற்கான இணையவழி முறை ஊடாக சேவைத் துவக்கப் பயிற்சி நிகழ்ச்சி மூன்று பரீட்சை நிலையங்களில் நடாத்தப்பட்டது.*
    - *SLIDAComputer Driving Licenseதிட்டத்தில் 33 பரீட்சார்த்திகளுக்கு பரீட்சை நடாத்தப்பட்டன.*

- **ஆராய்ச்சிப் பிரிவு**
    - *கலமனா சஞ்சிகையில் எட்டாம் தொகுதியின் முதல் இதழினை 2021 ஜூலை - திசெம்பர் வரை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*
    - *News letters சஞ்சிகையின் ஏழாம் தொகுதியின் முதல் இதழ் மற்றும் இரண்டாம் இதழ் வெளியிடப்பட்டுள்ளது.*

# 9. தொலைக் கல்வி நிலையம்

**ஆம் ஆண்டில் அடையப் பெற்ற இலக்குகள் 2022**

- **கல்வி அமைச்சுக்கான இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

மேல் மாகாண கல்வித் திணைக்களம்தமது , திணைக்களம் மற்றும் மேல் மாகாண வலயக் கல்விப் பணிமணைக்கு இணைக்கப்பட்டுள்ள முகாமைத்துவஉதவியாளர்களுக்கு மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு பல்வேறு பாடப் பரப்புக்களின் கீழ் இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தும் பணியை தொலைக் கல்வி நிலையத்திடம் ஒப்படைத்திருந்தது 2022 ,அதற்கமைய .ஆம் ஆண்டில் கலப்பு மாதிரியில் நடாத்தப்பட்டு வந்த நிகழ்ச்சித்திட்டங்களிலும் 11120 ஆன உத்தியோகத்தர்கள் பயிற்சியளிக்கப்பட்டார்கள்.

- **இணையவழி முறை ஊடாக பரீட்சைகளை நடாத்தல்**

தொலைக் கல்வி நிலையம் பல்வகையான சேவை பெறுநர்களுக்கு இணையவழி பரீட்சைகளை நடாத்துவதில் முன்னனியில் திகழ்கின்றது அவ்வாறு தொலைக் .கல்வி நிலையத்தினால் வழங்கப்படும் சேவைகளை பெறும் சேவை பெறுநர்களில் பட்டய முகாமைத்துவ கணக்காளர் )CIMA), பட்டய சான்றளிக்கப்பட்ட கணக்காளர்கள் சங்கம் )ACCA) மற்றும் பட்டய நிதி ஆய்வாளர்கள் )CFA) ஆகியவை உள்ளடங்கும்நம்பகமான பரீட்சைச் . தொலைக் கல் ,சூழல் காரணமாகவி நிலையம் சேவை பெறுநர்களினால் தங்களது பரீட்சைகளை நடாத்துவதற்கு சேவையை எதிர்பார்க்கும் நிறுவனமாக மாறியுள்ளது.



**இணையவழி முறை ஊடாக பரீட்சைளை நடாத்துதல்**

- **பிரசித்த கருத்தரங்குகளை நடத்துதல்**

தகவல் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் வேலைத் தளத்தின் உற்பத்தித்திறனை மேம்படுத்தல்அரச ,உயர் எக்ஸேல் பயன்பாடு , பெறுகைக்கு விலை மனு மதிப்பீடு மற்றும அரசின் பெறுகை நடவடிக்கைக்கு விலை மனுக்களை வெற்றிகரமாக மேற்கொள்ளல் போன்ற தலைப்புக்களில் கருத்தரங்குகள் உள்ளிட்ட 20 பிரசித்தமான செயலமர்வுகள் 2022 ஆண்டில் தொலைக் கல்வி நிலையத்தில் ஆம் இந்த .நடாத்துவதற்கு முடியுமாக இருந்தது கருத்தரங்குகள் இணையவழி முறை ஊடாகவும் அதற்குப் புறம்பாக சாதாரண வகையிலும் நடாத்தப்பட்டது.

- **தொகுதி மற்றும் வலைமைப்பு நிர்வாகம்**

பிரசித்த கருத்தரங்கின் கீழ் தொலைக் கல்வி நிலையத்தினால் நடாத்தப்பட்ட முதன்மையான நிகழ்ச்சித்திட்டங்களில் அத்தியவசிய தொகுதி மற்றும் வலைமைப்பு நிர்வாகப் பயிற்சித் திட்டமும் உள்ளடங்குகின்றது .

- **அரச பெறுகைச் செயற்பாடு தொடர்பான சான்றிதழ் பத்திர பாடநெறி**

இற்கும் மேற்பட்ட அரச 40 உத்தியோகத்தர்களின் பங்குபற்றலுடன் அரசின் பெறுகை தொடர்பான நாள் கொண்ட 10 சான்றிதழ் பத்திர நிகழ்ச்சித்திட்டம் .நடாத்தப்பட்டதுஇந்நிகழ்ச்சித்திட்டம் இணையவழி முறை ஊடாக வழங்கப்பட்டது.



**அரச பெறுகைச் செயற்பாடு தொடர்பான சான்றிதழ் பத்திர பாடநெறி**

- **ப்லட்டரைப் பயன்படுத்தி மொபைல் செயலியை உருவாக்குதல்**

மொபைல் செயலியின் மேம்பாடு குறித்த பயிற்சித் திட்டம் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இணையவழி ஊடாக நடாத்தப்பட்டதுஅதற்கான சான்றிதழ்கள் . வழங்கும் விழாவும் யாழ்ப்பாண மாவட்டச் .செயலகத்தில் நடைபெற்றது

- **குறித்த வளாகத்தில் பயிற்சி**

தொலைக் கல்வி நிலையம் சேவைப் பெறுநர்களின் தேவைகளுக்கு ஏற்ப வழங்கப்படும் பயிற்சித் திட்டங்கள் சேவைப் பெறுநர்களின் வளாகங்களிலே நடாத்துதல் . இங்கு பல தலைப்புக்களில் பல .நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன

## *10. மனித வள அபிவிருத்திக்கான இலங்கை தேசிய சபை*

*அரசாங்கத்திற்கு மனித வள மேம்பாட்டிற்கான கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களை வழங்குவதற்கு பொருத்தமான நிறுவன கட்டமைப்பை உருவாக்குதல். மனித வள அபிவிருத்திக்கான கொள்கை செயல்முறை திட்டமிடல், கொள்கை மீளாய்வு மற்றும் மனித வள அபிவிருத்தி போன்ற துறைகளுக்காக மனித வள அபிவிருத்திக்கான இலங்கை தேசிய சபை பொறுப்பினை வகிக்கும்.*

***2022 ஆம் ஆண்டில் அடைந்து கொண்ட சாதனைகள்***

*கொழும்பு மாவட்டத்தில் சேவையாற்றும் அரச சேவையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள பட்டதாரிகளை வினைத்திறனாக சேவையில் ஈடுபடச் செய்தல் குறித்து ஆய்வு நடத்தப்பட்டு அதன் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.*




- *புள்ளிவிபரவியல் கையேடு - 2021 தயாரிக்கப்பட்டு சபையின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.*
- *மனித மூலதன இதழ் தயாரிக்கப்பட்டு சபையின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.*
- *மனித வள மேம்பாடு குறித்த நிபுணர்கள் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.*
- *ரகியா அருண நிகழ்ச்சித்திட்டம் நீர்கொழும்பு நகர மண்டபத்தில் இடம்பெற்றதுடன், அதில் நூற்றுக்கும் மேற்பட்ட பாடசாலையை விட்டு வெளியேறியவர்கள் மற்றும் தொழிற் பயிற்சியினைப் பெற்றவர்கள் கலந்துகொண்டனர்.*



**நீர்கொழும்பு நகர மண்டபத்தில் நடைபெற்ற ரகியா அருண நிகழ்ச்சித்திட்டம்**

***2022ஆம் ஆண்டில் அடைய வேண்டிய இலக்குகள்***

- *தேசிய மனித வளம் மற்றும் தொழிற் பாதுகாப்புக் கொள்கை தற்போதைய அரசாங்கத்தின் "சுபீட்சத்தின் நோக்கு " இற்கு ஏற்ப மீளாய்வு செய்தல் மற்றும் இற்றைப்படுத்தல்*
- *துணை தேசிய மட்டங்களில் மனித வள மேம்பாட்டை அளவிட மனித வள மேம்பாட்டு குறிகாட்டிகளை உருவாக்குவதற்கான சாத்தியம் மற்றும் அவசியத்தை ஆராய்தல்*
- *2022 ஆம் ஆண்டிற்கான புள்ளிவிபரவியல் கையேட்டினைத் தயாரித்தல்*

***நிறுவனத்தின் பணிகளை உயர் பயனுறுதியுடன் பயன்படுத்துவதற்கான செயன்முறைகள்***

- *வீட்டிலிருந்து வேலை செய்தல் என்ற எண்ணக்கருவிற்கு ஏற்ப, இணையவழி முறை ஊடாக தினசரி அலுவலக வேலைகள் செய்யப்பட்டதோடு, Zoom தொழில்நுட்பத்தின் ஊடாக பயிற்சித் திட்டங்களை நடாத்துதல் மற்றும் Zoom தொழில்நுட்பத்தின் மூலம் பல் தரப்பினர்களுடன் கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன. மின்னஞ்சல் மூலம் கடிதப் பரிமாற்றங்களை நடத்தி காகிதப் பயன்பாட்டை முடிந்தவரை குறைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது .*

# *11.* தேசிய மொழிகள் பிரிவு

தேசிய மொழிகள் பிரிவு, சமூகத்தில் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்காக அரச மொழிக் கொள்கையை (OLP) திறம்பட நடைமுறைப்படுத்தும் நோக்கத்துடன் அமைச்சின் பிரிவுகளில் ஒன்றாகச் செயற்படுகிறது. அரசகரும மொழிக் கொள்கையை திறம்பட நடைமுறைப்படுத்துவதற்காக அடையாளம் காணப்பட்ட திட்டங்கள் பல்வேறு மட்டங்களிலும் பல்வேறு வழிமுறைகளிலும் வழங்கப்படுகின்றன.

**அரச கரும மொழிகள் மேம்பாட்டுத் நிகழ்ச்சித்திட்டம்-2022 இல் அடையப்பெற்ற இலக்குகள்**

- ***பாடசாலைகள் மற்றும் பொது நூலகங்களுக்கு மும்மொழி நூல்கள் விநியோகம்.***

*6 மாவட்டங்களில் உள்ள பாடசாலை நூலகங்கள் மற்றும் பொது நூலகங்களுக்கு 59 மும்மொழி நூல்கள் வழங்கப்பட்டன.*



***பாடசாலைகள் மற்றும் நூலகங்களுக்கு நூல்கள் விநியோகம்.***

- ***கிளிநொச்சி மற்றும் மட்டக்களப்பில் மொழி நிலையங்கள்***

கிளிநொச்சியில் உள்ள மொழி நிலையம் அரச உத்தியோகத்தர்களுக்கு இரண்டாம் மொழி பாடநெறி தொடர்பான நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு வசதி செய்துள்ளது. நிறுவனங்களிலும் இரண்டாம் மொழிப் பயன்பாட்டை மேம்படுத்துவதற்கான முறைமைகள் மற்றும் நடைமுறைகளை மேம்படுத்துவதற்கான கற்கைநெறிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

**முக்கிய அடைவுகள்**

நாட்டில் நிலவும் ஸ்திரமற்ற சூழ்நிலை காரணமாக தேசிய வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட பணிகளை வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் உரிய முறையில் நடைமுறைப்படுத்த முடியவில்லை. எனவே, வருடாந்த செயற் திட்டம் திருத்தப்பட்டு அதன் முன்னேற்றம் கீழே காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை *11.1* - தேசிய மொழிகள் பிரிவில் ஏற்பாடுகள் வழங்கப்படும் பணிகளின் முன்னேற்றம்**

| தொ.இல | முக்கிய செயற்பாடுகள் | திருத்திய ஒதுக்கீடு ரூ. (மில்) | செலவு | குறிப்பு |
|---|---|---|---|---|
| அ | தேசிய மொழி விருத்தி நிகழ்ச்சித் திட்டம் (2509) | 5.0039 | - | கையிலுள்ள பற்றுச்சீட்டுக்கள் ரூ.மில் 4.8489 திறைசேரியிடமிருந்து |
| ஆ | அரச கரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தல் (1703 ) | 0.455 | ரூ. 0.1183 | கையிலுள்ள பற்றுச்சீட்டுக்கள் ரூ. 0.3367மில் |
| | **மொத்தம்** | **5.4589** | | |

# 12. அரச கரும மொழிகள் ஆணைக்குழு

அரச கரும மொழிகள் ஆணைக்குழு 1991 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க அரச கரும மொழிகள் ஆணைக்குழு சட்டத்தால் நிறுவப்பட்ட ஒரு நியதிச் சட்ட சபையாகும். இது ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஆறு உறுப்பினர்களைக் கொண்ட ஆணைக்குழுவாகும்.

**2022 ஆண்டின் முக்கிய செயலாற்றுகை**

- **மொழி கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்**

அரச கரும மொழிகளின் பயன்பாடு தொடர்பான அரசியலமைப்புச் சட்டத்தின் ஏற்பாடுகள் அரச பொறிமுறை ஊடாக முறையாகப் பின்பற்றப்படுகிறதா என்பதைச் சரிபார்க்க இந்த ஆண்டில் 21 மொழி கணக்காய்வுகள் நடத்தப்பட்டன.



மொழி கணக்காய்வு – பிரதேச செயலகம் ஹம்பாந்தோட்டை

- **விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்**

அரச அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் அரச மொழிக் கொள்கையை ஊக்குவிக்கக்கூடிய பல்வேறு தரப்பினருக்கு 07 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

- அரச கரும மொழிகள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளம் 2022.01.12 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டது.
- மொழிக்கான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கான ஆரம்ப கலந்துரையாடல் 2022.06.16 அன்று மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் கிஹான் டயஸுடன் நடைபெற்றது.
- 2022 ஆம் ஆண்டில், 40 பொதுமக்கள் முறைப்பாடுகள் ஆணைக் குழுவுக்கு கிடைக்கப் பெற்றதுடன், அவற்றில் 11 முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டுள்ளன.
- அரச கரும மொழிகள் ஆணைக்குழுவினால் மொழி கணக்காய்வு அரச உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டுதல் மற்றும் கருத்துக்கணிப்புகளை செய்தல் குறித்த நிறுவனங்களுக்குச் செல்வதில் பௌதீக ரீதியாக உள்ள நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக மேற்படி நடவடிக்கைகளை இணையவழி ஊடாக மேற்கொள்ள ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

**2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ள எதிர்பார்க்கும் செயற்பாடுகள்**

- தமிழ் மொழி தினத்தை முன்னிட்டு மேல் மாகாணத்தில் உள்ள தமிழ் மொழி மூல பாடசாலை பிள்ளைகளுக்கு பாடசாலை மொழி வட்டங்களை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தை நடத்துதல்.
- அரச கரும மொழிக் கொள்கை மற்றும் அதன் சட்டப் பின்னணி குறித்து தென் மாகாண பிரதேச செயலகங்களின் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டுதல்.
- அரச கரும மொழிக் கொள்கை மற்றும் அதன் சட்டப் பின்னணி குறித்து வடமாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டுதல்.
- பிரதேச செயலகங்களில் அரச கரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவது பற்றிய தகவல்களை கருத்துக் கணிப்புக்கு உட்படுத்தல்.
- மொழி சட்டத்தை அமுல்படுத்துவதற்காக பயன்படுத்தக்கூடிய வழிகாட்டல் கையேட்டை உருவாக்குதல். இந்த கையேட்டின் மூலம் ஆணைக்குழுவின் அமுலாக்கப் பணியை மிகவும் வினைத்திறனாக மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்படி எதிர்பாரக்கப்பட்ட பணிகளை நேரடியாக நடத்த முடியாத பட்சத்தில், நடைமுறை சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு, இணையவழி மூலம் நடத்த ஏற்பாடு செய்யப்படும்.

# 13. அரசகரும மொழிகள் திணைக்களம்

**வருடத்தில் அடையப்பெற்ற சிறப்பு வாய்ந்த சாதனைகள்**

- 30.09.2022 ஆந் திகதிக்கு 9228 அரச உத்தியோகத்தர்கள் அரசகரும மொழித் தேர்ச்சியின் வாய் மூலப் பரீட்சை நடாத்தப்பட்டுள்ளது.
- "திணைக்களத்தின் வரலாறு" என்ற புத்தகம் 01.10.2022 ஆந் திகதிய நினைவு நாளில் வெளியிடப்படவுள்ளது.



திணைக்களத்தின் வரலாறு என்ற புத்தக வெளியீடு

- பெருமளவிலான இலக்கியப் படைப்புகளை சிங்கள மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்யப்பட்ட பணி பாராட்டப்பட வேண்டியதாகும். அரசகரும மொழிகள் திணைக்களத்தின் விசேட பாராட்டு விருதுகள், பிரபல மொழிபெயர்ப்பாளரும், எழுத்தாளரும், இலக்கியத்துறை விரிவுரையாளருமான சூலானந்த சமரநாயக அவர்களுக்கு வழங்கப்பட்டது.



அரசகரும விசேட பாராட்டு விருதுகள்இலக்கியவாதி , சூலானந்த சமரநாயக அவர்களுக்கு வழங்கப்பட்டது

- 31.10.2022 ஆந் திகதிக்குள்ள மொழிபெயர்ப்புத் தின விழாவை முன்னிட்டு மொழிபெயர்ப்பாளர்களுக்கான மொழிபெயர்ப்புக் கையேடு வழங்கப்படுவதோடு தற்சமயம் 75 அருஞ்சொற்தொடர்கள் பயன்படுத்தப்படவுள்ளது.
- புதிய பயன்பாட்டு 08 அருஞ் சொற்தொடர்கள் Termino Hub இணையப் பக்கத்தின் ஊடாக இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.
- அரச உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்ட 381 மொழிப் பயிற்சி பாடநெறிகளை நிறைவு செய்த 21889 உத்தியோகத்தர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.
- சிங்கள மொழித் தின விழாவை கொண்டாடுதல் கலாநிதி ரத்ன ஸ்ரீ விஜேசிங்க அவர்களின் தலைமையில் உலபனே கல்வி வலயத்தின் 24 பாடசாலைகளின் மாணவர்கள் பங்கேற்புடன் நடைபெற்றது.
- கருத்து முரண்பாடுகளுக்கு உட்பட்டுள்ள மொழிப் பிரச்சினையை தீர்ப்பதற்காக நிபுணத்துவ திறனுடைய சிங்களம் / தமிழ் மொழிப் புலமை கொண்டவர்களின் குழுவினை தேர்ந்தெடுத்தல்.
- நிலவுகின்ற பொருளாதார நிலைமையின் கீழ் தகுதியுடைய மொழி ஆலோசகர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் நடவடிக்கைக்கான நேர்முகப் பரீட்சை மற்றும் பயிற்சி Zoom இன் ஊடாக நடாத்துதல், மொழிபெயர்ப்பு நடவடிக்கைகள் இணையவழி ஊடாகவும் பாடநெறி சான்றிதழ்களின் கண்காணிப்பிற்காக Certificate Verification System இழன அறிமுகப்படுத்தல்.

**வருடத்தில் மேற்கொள்ளப்படவுள்ள விசேட செயற்பாடுகள்**

- Bhashawa.lk இணையத்தளத்தின் மூலம் மொழி வசதிகளை வழங்குநர்களின் குழாத்தை இற்றைப்படுத்துவதற்காக ஆட்சேர்ப்பிற்கான பரீட்சையை நடாத்துதல்.
- அ.நி.சு. 2014/1 இன் படி தற்சமயம் விண்ணப்பித்துள்ள வாய் மொழி மூலப் பரீட்சையை நிறைவு செய்ய வாய்ப்பினை பெறும் விண்ணப்பித்துள்ள 10772 அரச உத்தியோகத்தர்களுக்கு மொழித் தேர்ச்சி வாய்மூலப் பரீட்சையை நடாத்துதல்.
- 120 பரீட்சார்த்திகளுக்கான தேசிய மொழித் தகைமை(NLQ) மதிப்பீட்டுப் பரீட்சையை நடாத்துதல்.
- அ.நி.சு. 2020/18 இன் படி அரச உத்தியோகத்தர்களுக்கான நாடளாவிய பாடநெறிகளை ஒழுங்குபடுத்துதல்.
- தமிழ் தலைப்புடனான அகராதி மற்றும் சிங்கள தலைப்புடனான அகராதியை நிர்மாணித்து e-book இன் ஊடாக இணையத்தளத்தில் வெளியிடப்படவுள்ளது.

# 14. தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்

மிகச் சிறந்த பொறிமுறைக்காக இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை மேம்படுத்துவதன் மூலம் அரசகரும மொழிக் கொள்கையை முறையாகச் செயற்படுத்தும் நோக்கத்துடன் தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் 2007 ,ஆம் ஆண்டின் 26ஆம் இலக்கச் சட்டத்தினால் நிறுவப்பட்டது .

**2022ஆம் ஆண்டில் அடையப்பெற்ற தனிச்சிறப்பு வாய்ந்த சாதனைகள் பற்றிய தகவல்கள்**

♦ **மூலதன ஒதுக்கீட்டின் மூலம் செயற்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்றம்**

2022ஆம் ஆண்டில் 1300பயிற்சிப் பாடநெறிக்காக ரூபா 20.மி .ஆன தொகை ஒதுக்கப்பட்டுள்ள பின்னணியில் ,இந்த ஒதுக்கீடுகளுக்கு உரித்தான வருடாந்த இலக்குகள் ,தற்சமயம் %100இனால் எட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 14.1 - மூலதன ஏற்பாடுகள் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்**

| தொ /இல. | நிகழ்ச்சித்திட்டம் | இலக்கு | | | 2022.09.30 -01.01 .2022வரையான முன்னேற்றம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | பௌதீக முன்னேற்றம் )நிறைவு செய்யப்பட்டுள்ள மற்றும் செயற்பாட்டில் உள்ள நிகழ்ச்சித்திட்டங்கள்( | | | நிதியியல் முன்னேற்றம் | |
| | | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பாடநெறி பயனாளிகளின் எண்ணிக்கை | நிதி ஒதுக்கீடு )ரூபா . மில்( | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பாடநெறி பயனாளிகளின் எண்ணிக்கை | % | )ரூபா . மில்( | % |
| 1 | அரச உத்தியோகத்தர்களுக்கான 100மணித்தியால சிங்களம்/தமிழ் மொழிப் பயிற்சித் திட்டங்கள் | 6 | 300 | 588 | 3 | 161 | | | |
| 2 | அரச உத்தியோகத்தர்களுக்கான 150மணித்தியால சிங்களம் / தமிழ் பயிற்சித் திட்டங்கள் | 90 | 4,500 | 12.6 | 87 | 5,019 | 100 | 8.898 *** | %55 *** |
| 3 | அரச உத்தியோகத்தர்களுக்கான 200மணித்தியால சிங்களம் / தமிழ் பயிற்சித் திட்டங்கள் | 15 | 750 | 2.97 | 21 | 1,241 | | | |
| | **மொத்தம்** | **111** | **5,550** | **16.158** | **111** | **6,421** | | | |
| 4 | வளவாளர்களுக்கான பின்தொடர்தல் மற்றும் ஒழுங்குமுறை திட்டங்கள் | 6 | 360 | 0.72 | 8 | 521 | 133 | 0.613 | 85.2 |
| | **முழு மொத்தம்** | **117** | **5,910** | **16.878** | **119** | **6,941** | | | |

****வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. பாடநெறிகளுக்கு உரித்தாக செலுத்தப்பட வேண்டிய பற்றுச்சீட்டுக்கள் இன்னும் கிடைத்தவண்ணம் உள்ளது.**

♦ **30.09.2022ஆந் திகதிக்கு நிறைவு செய்யப்பட்டுள்ள மற்றும் செயற்பாட்டில் உள்ள வருமானம் ஈட்டும் பாடநெறிகள்**

சிங்களம் ,தமிழ் ,ஹிந்தி ,ஜப்பான் ,பிரெஞ்சு மொழிகளில் மொழிபெயர்ப்புகள் ,பிரேல் மொழி மற்றும் சைகை மொழி ஆகியன வருமானம் ஈட்டும் பாடநெறிகளின் மூலம் ரூபா 64.24 .மில்லியன் தொகை சம்பாதிக்க முடியுமாக இருந்ததோடு ,இதற்காக Zoom தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டது .

♦ "சமூக நோக்கத்திற்கான புதிய தொழிற் பாதை ,சைகை மொழியைக் கற்று சுபீட்சத்திற்கு கைகொடுப்போம் "என்ற தலைப்பில் சர்வதேச மொழித் தினத்தை முன்னிட்டு சைகை மொழிச் சான்றிதழ் பாடநெறியை தொடங்குதல். ஒரு குழுவில் பாடநெறிப் பயனாளர்கள் 17பேர் என்ற விகிதத்தில் 34பயனாளிகளுக்கு 02.01.2022 ஆந் திகதி இப்பாடநெறியை ஆரம்பித்தல்.




**சர்வதேச மொழி தினத்தை முன்னிட்டு வெளியிடப்பட்ட விளம்பரம் மற்றும் சைகை மொழி சான்றிதழ் பாடநெறித்திட்டம்**

- "இருளில் வெளிச்சத்தைக் காண்போம் " வாருங்கள் ,நாம் அவர்களுக்கு வெளிச்சத்தைக் காட்டுவோம் .என்ற தலைப்பில் ஒருங்கிணைந்த மொழிக் கல்வியை ஊக்குவிக்கும் வகையில் ஒரு படியாக பிரெய்லி மொழி சான்றிதழ் பாடநெறியை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்தல்.
- பாடநெறிப் பயனாளிகள் 14பேருக்கான பிரெஞ்சு மொழிச் சான்றிதழ் பாடநெறி 30.09.2022ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டது.
- தம்புள்ள பிராந்திய பயிற்சி நிலையம் மாத்தளை மாவட்ட நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான கட்டிடத்தில் நிறுவப்பட்டுள்ளது .

**சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடத்திற்கு ஏற்ப நிறைவேற்றிக் கொண்டிருக்கும் அல்லது நிறைவேற்ற இருக்கும் புதிய செயற்பாடுகள் மற்றும் தற்போதைய முன்னேற்றம்**

- ஆசிரியர் பயிற்சிப் பாடநெறி -இந்த பாடநெறியின் மூலம் மொழித் திறன் மற்றும் கற்பித்தல் திறன் உள்ளவர்கள் இந்த நிறுவனத்தின் வளவாளர்களாக பணியாற்ற முடியுமாக உள்ளதோடு அது அவர்களுக்கு வருமான வழியாகவும் உள்ளது 2022.ஆம் ஆண்டில் இவ்வாறான 2பாடநெறிகள் நடாத்தப்பட்டுள்ளதோடு அதில் 89 வளவாளர்கள் பயிற்சி அயளிக்கப்பட்டுள்ளார்கள் .அவ்வாறே எதிர்வரும் 3மாத காலத்தினுள் ஆசிரியர் பயிற்சி பாடநெறியை தொடங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
- புலம்பெயர் தொழிலாளர்களுக்கான வெளிநாட்டு மொழிப் பயிற்சிப் பாடநெறி - இப்பயிற்சியின் முலம் அவர்களுக்கு மிகவும் வினைத்திறனான சேவையை வழங்க முடியுமாக உள்ளதோடு நமது நாட்டின் நற்பெயரை மேலோங்கச் செய்ய உதவும்.
- சுற்றுலா வழிகாட்டிகளுக்கான வெளிநாட்டு மொழிப் பயிற்சிப் பாடநெறி - இப்பயிற்சியின் முலம் தரமான சேவையை வழங்குவதற்கான வாய்ப்பு உருவாகி நாட்டின் நற்பெயரை அதிகரிக்கச் செய்யவும் உதவும்.
- நிறுவனத்தினால் நடாத்தப்படும் பிற அனைத்து மொழிப் பயிற்சிப் பாடநெறியின் மூலம் பயனுறுதி மற்றும் வினைத்திறனான அரச சேவையை வழங்குக உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 15. பாராளுமன்ற அலுவல்கள் பிரிவு

***2022ஆம் ஆண்டில் முக்கிய செயலாற்றுகை***

- கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆராய்ச்சி உத்தியோகத்தர்களுக்கு 05 இணையவழி பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளன.
- கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் பணிக்குழாமினருக்கான "ஆராய்ச்சி முறைமை" தொடர்பான இணையவழி செயலமர்வுகள் பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மனிதவளப் பிரிவின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்றது. மேலும் 03 செயலமர்வுகள் நடத்தப்பட உள்ளன.
- "கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் தனிப்பட்ட பணிக்குழாமினர்களுக்கு அரச உத்தியோகத்தர்களை தற்காலிகமாக நியமிப்பது தொடர்பான சரியான வழிகாட்டுதலின் தேவை நீண்ட காலமாக இருந்து வந்தது, அதற்குப் பரிகாரமாக, அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன், 2022.09.23 ஆந் திகதி பொது நிர்வாகச் சுற்றறிக்கை 21/2022 வெளியிடப்பட்டது.
- பொருளாதார நெருக்கடிக்கு ஏற்ற வகையில் அலுவலகப் பணிகளை மிகவும் பயனுள்ள முறையில் செய்ய தகவல் தொழில்நுட்ப அறிவைப் பயன்படுத்தி புதிய முறைகள் மூலம் பணிகளை மேற்கொள்ளுதல்.
- நீண்ட காலமாக தனியார் கட்டிடத்தில் பேணப்பட்டு வந்த இந்த திணைக்களம், நாரஹேன்பிட்டியில் உள்ள "நில மெந்துர" 18வது மாடியில் நிறுவப்பட்டது, இதனால் வருடாந்தம் சுமார் 16 மில்லியன் பொதுச் செலவு மீதப்படுகிறது.
- கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான குழுக் காப்புறுதி மூலம் 2021.08.20 முதல் 2022.08.19 வரையிலான காப்புறுதி ஆண்டில் 96 காப்புறுதி நன்மைகள் மற்றும் 2022 ஆம் ஆண்டில் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை தேய்மான அடிப்படையில் வழங்கப்படும் அலுவலக உபகரணங்கள்14 கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## 16. 2023 ஆம் ஆண்டு செயற்படுத்த எதிர்பார்க்கும் பணிகள்

- இணைந்த மற்றும் நாடளாவிய சேவைகளின் உத்தியோகத்தர்களின் சகல தாபன நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்
- அரச சேவையை பேணிச் செல்வதற்காக நாடளாவிய மற்றும் இணைந்த சேவைகளுக்கு அத்தியவசிய ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளல்
- தேசிய மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட பயிற்றுவிப்புக்கள், விழிப்பூட்டல்கள் மற்றும் மொழிக் கணக்காய்வினை மேற்கொள்ளல்
- சேவை துவக்கப் பயிற்சி, திறன் விருத்திப் பயிற்சி மற்றும் அரச உத்தியோகத்தர்களின் ஏனைய பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- அமைச்சின் கீழ் இயங்குகின்ற அரசின் உத்தியோகபூர்வ இல்லங்களுக்கான புதிய வீடமைப்புக் கொள்கையை அறிமுகப்படுத்தல்
- அமைச்சின் கீழ் நிர்வாகிக்கப்பட்டு வரும் ஓய்வு விடுதிகள் மற்றும் சுற்றுலா பங்களாக்கள் பதிவு செய்வதற்காக இணையவழி முறையை அறிமுகப்படுத்தல்
- பங்களிப்பு ஓய்வூதிய நிதிச் சட்ட வரைவினை அறிமுகப்படுத்தல்
- அரச சேவை ஊழியர் சட்ட வரைவினைத் தாயரித்தல்
- ஓய்வூதியர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான பங்களிப்பினை வழங்குதல் மற்றும் ஓய்வூதியம் செலுத்துதல் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- அரச சேவையை இயல்பாக பேணிச் செல்வதற்குத் தேவையான கொள்கைத் தீர்மானங்களை வழங்குதல்

# ස්වදේශ කටයුතු අංශය

# உள்நாட்டலுவல்கள் பிரிவு

# Home Affairs Division

# உள்ளடக்கம்


**பக்க எண்**

1. **2022 ஆம் ஆண்டின் ஒட்டுமொத்த நிதி முன்னேற்றம்** **01 - 08**

   **1.1.**ஒட்டுமொத்த நிதி முன்னேற்றத்தின் சுருக்கம் 01 - 02

   **1.2.**விரிவான நிதி முன்னேற்றம் 02 – 08

2. **2022.01.01 முதல் 2022.09.30 வரை உள்நாட்டலுவல்கள் பிரிவின் பௌதீக முன்னேற்றம்** **09 – 11**

3. **2022.01.01 இலிருந்து 2022.09.30 வரை வரையிலான வருவாய் சேகரிப்பின் முன்னேற்றம்** **11 – 11**

4. **எதிர்பார்க்கப்படும் வரவுசெலவுத்திட்ட மதிப்பீடு - வரவுசெலவுத்திட்ட ம் 2023** **12 - 12**

## உள்நாட்டலுவல்கள் பிரிவுகள்

இப்பிரிவானது நாடளாவியரீதியில் 25 மாவட்ட செயலகங்கள், 336 பிரதேச செயலகங்கள், 14,022 கிராம அலுவலகங்களையும் உள்ளடக்கிய ஒன்பது முக்கிய உள் பிரிவுகளை கொண்டுள்ளது. மிகவும் திறமையான மற்றும் பயனுள்ள பொது சேவையை வழங்குவதற்கு தேவையான மனித மற்றும் பௌதீக வளங்கள் மற்றும் பிற வசதிகளை வழிநடத்துதல், ஒருங்கிணைத்து வழங்குதல் ஆகியவை இந்த பிரிவுகளின் ஒட்டுமொத்த பங்கு ஆகும்.




# 1. 2022 ஆம் ஆண்டின் ஒட்டுமொத்த நிதி முன்னேற்றம்

## 1.1. ஒட்டுமொத்த நிதி முன்னேற்றத்தின் சுருக்கம்

| # | பிரிவு | மொத்த ஒதுக்கீடு (ரூ. மில்) | மூலதனச் செலவினங்கள் (ரூ. மில்) (A) | மீளெழும் செலவினங்கள் (ரூ. மில்) (B) | மொத்தச்செலவு (ரூ.மில்) (A+B) | மொத்த வருமானம் (ரூ. மில்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | உள்நாட்டலுவல்கள் பிரிவு | 13,099.00 | 550.39 | 8,501.16 | 9,051.55 | - |
| 2 | மாவட்டமட்டம் (மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள்) | 36,939.00 | 6,137.81 | 14,005.82 | 20,143.63 | 113.27 |
| | **மொத்தம்** | **50,038.00** | **6,688.20** | **22,506.98** | **29,195.18** | **113.27** |

❖ மூலதன ஒதுக்கீடு

| # | நிகழ்ச்சித் திட்டம் | செலவினத் தலைப்பு | மொத்த ஒதுக்கீடு (ரூ.) (A) | மூலதனச் செலவினங்கள் (ரூ. மில்) (B) | ஒதுக்கீட்டின் மீதி (ரூ. மில்) (AB) | செலவினத்தின் முன்னேற்றம் (% ) இல் (B/A*100) |
|---|---|---|---|---|---|---|
| 1 | அமைச்சரின் அலுவலகம் | 409-01-01 | 0.25 | - | 0.25 | 0 |
| 2 | உள்நாட்டலுவல்கள் பிரிவு | 409-01-05 | 68.75 | 43.15 | 25.60 | 63 |
| 3 | கிராமப்புற மற்றும் பிராந்திய நிர்வாகம் | 409-01-06 | 17.00 | 5.13 | 11.87 | 30 |
| 4 | உள்நாட்டலுவல்கள்-அபிவிருத்தித் திட்டங்கள் | 409-02-08 | 1,490.00 | 502.10 | 987.90 | 34 |
| 5 | மாவட்டமட்டம் (25 மாவட்டங்களுக்காக ) | 255-279 | 11,478.00 | 6,137.81 | 5,340.19 | 53 |
| மொத்தம் | | | **13,054.00** | **6,688.19** | **6,365.81** | **51** |

❖ மீளெழும் ஒதுக்கீடுகள்

| # | திட்டம் | செலவினத் தலைப்பு | வரவு செலவு திட்ட மதிப்பீடு (ரூ.மில்) (A) | மீளெழும் செலவினங்கள் (ரூ. மில்) (B) | ஒதுக்கீட்டின் மீதி (ரூ.மில்) (A-B) | செலவினத்தின் முன்னேற்றம் (% ) இல் (B/A*100) |
|---|---|---|---|---|---|---|
| 1 | அமைச்சரின் அலுவலகம் | 409-01-01 | 9.00 | 8.20 | 0.80 | 91 |
| 2 | உள்நாட்டலுவல்கள் பிரிவு | 409-01-05 | 582.10 | 402.56 | 179.54 | 69 |
| 3 | கிராமப்புற மற்றும் பிராந்திய நிர்வாகம் | 409-01-06 | 10,931.90 | 8,090.40 | 2,841.50 | 74 |
| 4 | மாவட்ட மட்டம் (25 மாவட்டங்களுக்கான) | 255-279 | 25,461.00 | 14,005.82 | 11,455.18 | 55 |
| மொத்தம் | | | **36,984.00** | **22,506.99** | **14,477.02** | **61** |

## 1.2. விரிவான நிதி முன்னேற்றம்

### 1.2.1. அமைச்சகமட்டம்

❖ மூலதன ஒதுக்கீடு -உள்நாட்டலுவல்கள் பிரிவு (409- 01-05,06/02-08)

| # | செலவு விடயம் மற்றும் விரிவாக்கம் | மொத்த ஒதுக்கீடு (ரூ.மில்) (A) | மூலதன செலவினங்கள் (ரூ.மில்) (B) | ஒதுக்கீட்டின் மீதி (ரூ.மில்) (A-B) |
|---|---|---|---|---|
| 01 | **(409-1-01)**<br>**மூலதன சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி**<br>2001- கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள்<br>2002- பொறித்தொகுதி, இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்<br>2003- வாகனங்கள் | 0.05<br>0.05<br>0.05 | -<br>-<br>- | 0.05<br>0.05<br>0.05 |
